Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY தேசிய தினசரி

போன்: 389

தபாற பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம், பிலவ தை 11 ஆம் நாள் ஷஃபான் 17 (24-1-62) புதன்கிழமை இதழ் 295

Jegajothi TOOTH POWDER
SEKAR & Co. MADURAI
ஜெகஜோதி பல்பொடி
சேகர் அன் கோ. மதுரை

# பிரிவினைக்கு காரணம்

## அரசாங்கமல்ல!

## தாய்மொழி கல்வியையே தமிழர் விரும்பினர்

### மகாவித்தியாலய அதிபர்கள் மகாநாட்டில் மந்திரி மாமூத்

கொழும்பு செவ்வாய்

"இலங்கை சுதந்திரமடைந்தபின் பெரும்பான்மை மக்களின் மொழியான சிங்களம் அரச கரும மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இலங்கையின் மற்றொரு முக்கிய சமூகத்தவராகிய தமிழ் மக்கள் தங்கள் தாய் மொழியிலேயே கல்வி போதிக்க வேண்டுமென்று விரும்பினர். எனவே பிரிவினை ஏற்பட்டது. தமிழ் சமூகத்தினரின் விருப்பத்தினுலேயே யொழிய அரசாங்கத்தின் கொள்கையினுலல்ல"

இவ்வாறு கல்வி மந்திரி ஜனுப் பதியுதீன் மாமூத் இன்று நாட்டிலுள்ள மகாவித்தியாலயங்களின் அதிபர்கள் மகாநாடு ஒன்றை கொழும்பில் ஆரம்பித்து வைத்து பேசுகையில் குறிப்பிட்டார்.

பரீட்சையில் சித்தி பெறுவது தான் மாணவர்களின் கல்வியின் நோக்கமாக இருக்கக் கூடாதென்றும் கல்வி மனித பண்பையும் நாட்டுக்காக நற்பணி செய்யும் மனப்பான்மையையும் உருவாக்குவதாக இருக்கவேண்டுமென்றும் கல்வி மந்திரி தெரிவித்தார்.

நாட்டிலுள்ள சகல பாடசாலைகளுக்கும் ஏற்ற ஒரே விதமான பாட அட்டவணை பற்றி அதிபர்களின் மகாநாடு ஆராய வேண்டுமென்றும் மந்திரி கேட்டுக்கொண்டார்.

தேசிய கல்வி முறை பற்றி மந்திரி பதியுதீன் மாமூத் குறிப்பிடுகையில் இனம், மதம், ஜாதி போன்ற வேற்றுமைகளின்றி கல்வியில் எல்லோருக்கும் சம சந்தர்ப்பம் அளிப்பது தான் இதன் நோக்கமென்றார்.

இந்த மகாநாட்டில் கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. ஜினதாசாவும் வித்தியாதிபதி திரு. எஸ். எப். டி' சில்வாவும் பேசினர்.

## சிங்கப்பூர் ஆதரவு

பினங், ஜன, 23

மேற்கு இரியானை விடுதலை செய்வதென்ற இந்தோனேஷியாவின் திட்டத்துக்கு ஆதரவுதெரிவித்து சிங்கப்பூர் சட்ட சபை இன்று ஒரு தீர்மானம் நிறைவேற்றியது.

---

## அத்தியடி விநாயகர் கோயில் லக்ஷசார்ச்சனை

யாழ்ப்பாணம், புதன்

அத்தியடி சிதம்பரநடராசா வீரகத்தி விநாயகர் கோவில் லட்சார்ச்சனையும் கூட்டுப் பிரார்த்தனையும் இம்மாதம் 22-ந் திகதி ஆரம்பமாகி இம்மாதம் 31ந் திகதி வரை தொடர்ந்து நடைபெறும்.

## இவ்வாண்டு இலங்கை சுதந்திர தினம்

### எல்லா அரசாங்க கட்டடங்களிலும் தேசிய கொடிகள் பறக்கும்

கொழும்பு, செவ்வாய்

சுதந்திர தினமாகிய பெப்ரவரி 4-ம் திகதியன்று அரசாங்கக் காரியாலயங்கள் கட்டடங்கள் யாவற்றிலும் தேசியக் கொடியை உயர்த்தி ஏற்றி வைக்குமாறு கைத்தொழில், உள் நாட்டுக் கலாச்சார இலாகா சகல இலாகாத் தலைவர்களையும் கேட்டுள்ளது.

இவ்வாண்டு சுதந்திர தினம் ஒரு ஞாயிற்றுக்கிழமையில் வருகிறது.

மத்திய தந்திக் கந்தோர், தபால் கந்தோர்கள், கொழும்பு சுங்க கட்டடம், செக்கிரிட்டாரியட் கட்டடம், அனுராதபுர ரயில்வே ஸ்டேஷன் பொலிஸ் நிலையம் ஆகிய கட்டடங்களில் விசேஷ ஜோடனை அலங்காரங்கள் அமைக்கப் படுமெனத் தெரிகிறது.

இராணி மாளிகை, 'டெம்பிள் ட்றீஸ்', பொலிஸ் தலைமைக் காரியாலயம், பிரதிநிதிகள் சபை, கால்பேஸ், செக்ரிட்டாரியட் உள்பட செனட் கட்டடம், சபாநாயகர், தேசாதிபதி இல்லங்கள் ஆகியவற்றை அலங்காரம் செய்யும்படி மராமத்து இலாகாவை கைத்தொழில் அமைச்சு கேட்டுள்ளது.

---

## மாணவருக்கு இலவச பஸ் பிரயாணம்

### கல்விக்கமிஷன் சிபார்சு

கொழும்பு, செவ்வாய்

மாணவர்கள் நடந்து பாடசாலைக்குச் செல்லக் கூடிய அளவு தூரத்தில் பாடசாலைகளில்லாத இடங்களில் வசிக்கும் பிள்ளைகளுக்கு பாடசாலைக்குச் செல்வதற்கு இலவச பஸ் பிரயாண வசதியளிக்க வேண்டுமென்று தேசிய கல்விக் கமிஷன் சிபார்சு செய்துள்ளது.

விடுமுறைகாலப் பயிற்சி வகுப்புக்கள் கல்வித் திட்டத்தின் ஒரு அடிப்படை அம்சமாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்றும் இப்பொழுதுள்ள விடுமுறை காலப் பயிற்சி முறையைச் சரியாகப் பயன்படுத்த வேண்டுமென்றும் கமிஷன் சிபார்சு செய்துள்ளது.

டாக்ஸி - பஸ் விபத்து

## பொலிசார் தாக்கியதாக இ. போ. ச. ஊழியர் புகார்

### விசாரணை நடத்த கோரிக்கை

யாழ்ப்பாணம், புதன்

இ. போ. ச. வைச் சேர்ந்த 'மெக்கானிக்' ஒருவரை பொலிஸ் சப்-இன்ஸ்பெக்டர் காரியப்பர் தாக்கியது சம்பந்தமாக உடனடியாக விசாரணை நடத்துமாறு யாழ்ப்பாணம் கிழக்கு டிப்போவைச் சேர்ந்த இ. போ. ச. ஊழியர் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலைக் கேட்டிருக்கின்றனர் எனத் தெரிகிறது.

சென்ற ஞாயிற்றுக்கிழமை இரவு யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெருவில் நடைபெற்ற டாக்ஸி-பஸ் கோர விபத்தின் போதே விபத்துக்குள்ளான பஸ்ஸில் வீடு செல்வதற்காகப் பிரயாணஞ் செய்துகொண்டிருந்த குறிப்பிட்ட இ. போ. ச. மெக்கானிக்கும், இன்னும் சிலரும் பொலிசாரால் தாக்கப்பட்டிருக்கின்றனர் எனத் தெரிகிறது.

இந்த விபத்தின்போது குறிப்பிட்ட பொலிசாரால் தாக்கப்பட்ட பொது மக்கள் சார்பிலும் விசாரணை நடத்துமாறு கேட்டுக்கொள்ளும் மகஜர் ஒன்றும் பிரதம மந்திரிக்கு அனுப்பப்படவிருப்பதாகத் தெரிகிறது.

### பஸ் சாரதிக்கு ரிமாண்ட்

சென்ற ஞாயிற்றுக்கிழமை இரவு யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத்தெருவில் நடைபெற்ற டாக்ஸி-பஸ் கோர விபத்தின் காரணமாகப் பொலிசாரால் கைது செய்யப்பட்ட அந்த பஸ் சாரதியான திரு. எஸ். தங்கவடிவேல் யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. அரசுவால் டன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். அந்த பஸ் சாரதியை இன்றுவரை ரிமாண்டில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. இன்று அவர் ஆஜராவரெனத் தெரிகிறது.

## மரண தண்டனை திருத்த மசோதா - விவாதம் நாளை நடைபெருது?

கொழும்பு, செவ்வாய்

வியாழக்கிழமை ஜனப்பிரதிநிதிகள் சபை கூடும்பொழுது மரண தண்டனைத் திருத்த (விசேஷ விதிகள்) மசோதா விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாதென்று தெரிகிறது. சபைக் கூட்ட நிகழ்ச்சி நிரலில் 67-வது விஷயமாக இத்திருத்த மசோதா சேர்க்கப்பட்டுள்ளது. நிகழ்ச்சி நிரலில் இந்த மசோதா முக்கிய இடம் பெருததால் இந்த மசோதாமீதான விவாதத்தை ஒத்திவைக்கவே அரசாங்கம் விரும்புவதாகக் கருதப்படுகிறது.

இத்திருத்த மசோதா வியாழக்கிழமை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு வெள்ளிக்கிழமையும் தொடர்ந்து விவாதிக்கப்படுமென முன்னர் எதிர்பார்க்கப்பட்டது.

நாளை மந்திரி சபை கூடும் பொழுது இத்திருத்த மசோதா பற்றி மந்திரிகள் பிரதம மந்திரியுடன் விவாதிப்பார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திருத்த மசோதாவுக்கு நாட்டிலுள்ள எதிர்ப்புக் காரணமாக அரசாங்கம் திருத்த மசோதாவின்மீதுள்ள விவாதத்தைத் தள்ளிப் போடுகிறதென்று எதிர்க் கட்சி அங்கத்தவர் ஒருவர் தெரிவித்தார்.

---

கிரிக்கெட்

## இங்கிலாந்துக்கு 431 ரன்கள்

டாக்கா, ஜன. 23

டாக்காவில் இங்கிலாந்து கோஷ்டிக்கும் பாகிஸ்தான் கோஷ்டிக்கும் இடையில் நடைபெற்றுவரும் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து தனதுமுதலாவது இன்னிங்ஸில் எல்லா விக்கெட்டுகளையும் இழந்து 431 ரன்கள் எடுத்தது- பாகிஸ்தான் தனது இரண்டாவது இன்னிங்ஸில் இன்று ஆட்ட நேரமுடிவுவரை விக்கட் நஷ்டமின்றி 28 ரன்கள் எடுத்தது.

## இன்ஷூரன்ஸ் கூட்டுத்தாபனம்

கொழும்பு, செவ்வாய்

இலங்கை ஆயுள் இன்ஷூரன்ஸ் கூட்டு ஸ்தாபனத்துக்கு சிறந்த எதிர்காலம் உண்டென்று இந்திய ஆயுள் இன்ஷூரன்ஸ் கூட்டுஸ்தாபன அதிபர் திரு. கோபால கிருஷ்ணன் நிருபர்கள் மகாநாட்டில் கூறினர்.

---

## வழக்கறிஞர் சங்க கூட்டம்

யாழ்ப்பாணம், புதன்

அரசாங்கம் கொண்டுவந்துள்ள மரணதண்டனை திருத்த மசோதாவை ஆட்சேபிக்குமுகமாக யாழ்ப்பாணம்வழக்கறிஞர் சங்கத்தினர் அவசரக் கூட்டமொன்று இன்று நண்பகல் 12-30 மணியளவில் நடைபெறவிருக்கிறது.

---

## நேபாள மன்னரை கொல்ல சதி

காட்மாண்டு, ஜன. 23

நேபாள மன்னர் மகேந்திரா நேற்று விராட நகரிலிருந்து ஜனக்காந்த என்ற நகருக்கு விஜயம் செய்தபோது நகர சபை அளித்த ஒரு வரவேற்பு வைபவத்தில் கலந்துகொள்வதற்காக காரில் சென்றுகொண்டிருந்தார். அச்சமயம் அவர் சென்றுகொண்டிருந்த கார்மீது ஒரு எறி வெடிகுண்டு வீசப்பட்டது. இதனுல் மன்னருக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படவில்லை.

இச்சம்பவம் காரணமாக உடனடியாகப் பலர் கைது செய்யப்பட்டனர். மன்னர் மகேந்திரா இப்பொழுது நாட்டின் கிராமப் புறங்களில் சுற்றுப் பிரயாணம் செய்து வருகிறார்.

# பிறப்புச் சாட்சிப்பத்திரம் பெறுவதில் பலர் அவஸ்தை!

கொழும்பு, செவ்வாய்

பிறப்பு இறப்பு பதிவு இலாகாவுக்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களின் பிரதிகளை அனுப்பிவைக்குமாறு பெருந்தொகையானோர் விண்ணப்பஞ் செய்துள்ளனர் எனவும் பதிவு அதிகாரிக்கு பெருந்தொகையானவர்களுக்கும் பிரதிகளை அனுப்பிவைக்க முடியாதிருக்கின்றதெனவும் தெரியவந்துள்ளது.

உத்தியோகம் தேடுபவர்களும், பரீட்சைக்குத் தோற்ற விருப்பவர்களும் தமது பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ள முடியாது போகும் என நம்பப்படுகிறது.

அரசாங்க உத்தியோக விண்ணப்பங்களுக்கும், பகிரங்க பரீட்சை விண்ணப்பங்களுக்கும் பிறப்புச் சாட்சிப் பத்திரங்களைக் கட்டாயமாக அனுப்பிவைக்கவேண்டும். கொழும்பில் பிறந்தவர்களின் விண்ணப்பங்களுக்குக் கூட இலாகா விண்ணப்பம் செய்த ஒரு வார காலத்துக்குப் பின்னரே பிறப்பு அத்தாட்சிப்பத்திரங்களை அனுப்பிவந்தது. அரசாங்க உத்தியோகங்களுக்கு விண்ணப்பஞ் செய்த பலர் பிறப்பு அத்தாட்சிப்பத்திரங்களின்றி அவஸ்தைப்படுகின்றனராம்.


### விற்பனைக்கு

ஆனைப்பந்தி குருநாத கோயிலுக்குத் தெற்குப் பக்கமாக நான்கு பரப்புடன் ஒருகல்வீடு விற்பனைக்குண்டு. விலை ரூபா 40000/- மேல், விபரம்: 145/4, பிரப்பங்குள ஒழுங்கை.

### கேள்விப்பத்திரம்

ஆஸ்பத்திரி சிப்பந்திகட்கு அங்கவுடை (Shorts & Shirts) தைப்பதற்கு விண்ணப்பங்கள் 31-1-62 க்கு முன் கீழ்க் காண்பவருக்குக் கிடைக்க வேண்டும் விண்ணப்பிப்போர் ஆஸ்பத்திரிக்குள் தானே இருந்துதைக்க வேண்டும்.

காரியதரிசி,
கூட்டுறவு வைத்தியசாலை,
மூளாய்.

### தேவை.

- வீட்டு வேலைகளில் அனுபவமுள்ள ஒருபெண் தேவை. நற்சாட்சிப்பத்திரங்கள் முதலியவற்றுடன் விண்ணப்பிக்கவும். காரியதரிசிமேற்பார்த்து ஸ்ரீமதி விஸ்வலிங்கம், கூட்டுறவுவைத்தியசாலை, மூளாய்.

### தேவை

பத்திரிகை விநியோகம் செய்வதற்கு (யாழ்ப்பாணத்திற்கு) தகுதி வாய்ந்த ஆள் தேவை. வயது 18 க்கு குறையாமலும் 20 க்கு கூடாமலும், இருக்க வேண்டும். உடனே நேரில் காண்க. நா. சு. திருநாவுக்கரசு,163, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

### அறிவித்தல்

காடு வெட்டி எரித்தல், கட்டை பிடுங்குதல், சாறுதல், வரம்பு போடுதல் இன்னும் வயல் வேலைகள் திருப்திகரமான முறையில் செய்து கொடுப்போம். விபரங்கட்கு: எம்.செங்கோல், c/o "வஸந்தாஸ்", கரடிப்போக்கு, கிளிநொச்சி.

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனாம்.

வைத்தியர் பரிபூரணானந்தர்,
கைலாசபிள்ளையார் கோவிலடி,
யாழ்ப்பாணம்


## தைப்பூச விழாவில் பொன்னாடை!

யாழ்ப்பாணம், புதன்

வண்ணார்பண்ணை ஸ்ரீ காமாட்சியம்பாள் கூட்டுப்பிரார்த்தனைச் சபை ஸ்ரீ காமாட்சியம்பாள் ஆலயத்தில் தைப்பூச விழாவும் மாணிக்கவாசகர் பிரதிஷ்டையும் நடைபெற்றன.

கதாப்பிரசங்கமும் நடைபெற்றது. வைத்தீஸ்வர வித்தியாலய ஆசிரியர் திரு. வி. க. ஆறுமுகத்திற்கு இச்சபையின் சார்பில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டது.

## கொழும்பு துறைமுக நிலைமை

கொழும்பு, செவ்வாய்

கடந்த இரண்டு தினங்களில் துறைமுகத்தில் 10,000 டன் உணவுப் பொருட்களை இராணுவம் ஏற்றி இறக்கி இருக்கிறது. இவற்றில் 2100 டன் உணவுப்பொருட்களாகும்.

## ஹிந்தி, உருது கவியரங்கு

புதுடில்லி, ஜன. 23

ஜனவரி 26-ம் தேதி குடியரசு தினவிழாவில் ஹிந்தி, உருது கவ்யரங்கம் ஒன்று நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.


### திருமண அழைப்பு

மணமகன் : செல்வன் சோதிநாதன்
(றேடியோகிராவ்றர், அரசாங்க வைத்திய சாலை, அம்பாந்தோட்டை)

மணமகள் : செல்வி பாலாம்பிகை

நிகழும் பிலவ ஆண்டு தைத்திங்கள் 13-ம் நாள் (26-1-62) வெள்ளிக்கிழமை பிற்பகல் 1-24 மணி தொடக்கம் 3 மணி வரை வரும் இடபலக்கின சுபமுகூர்த்தத்தில் திருமணம் மணமகள் இல்லத்தில் நடைபெறும்.

நண்பர்கள் உறவினர்கள் அனைவரும்வந்து மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

தங்கள் நல்வரவை விரும்பும்
மணமகளின் பெற்றோர்
திரு. & திருமதி. வி. செ. நடராசா
(எவர்சில்வர் மாளிகை உரிமையாளர்)
84/6, தபாற்கந்தோர் ஒழுங்கை,
வண்ணார்பண்ணை.

அவ்வண்ணம் விரும்பும்
திரு. & திருமதி. வை. சின்னத்துரை
திரு. & திருமதி. ந. திருச்செல்வம்
(எவர்சில்வர் மாளிகை, யாழ்ப்பாணம்.)
தந்தி : 'எவர்சில்வர்' யாழ்ப்பாணம்.


# கள்ளுக்குப் பதில் கசிப்பு!

மக்கோனா, செவ்வாய்

அளுத்கம பகுதியிலுள்ள மதுப்பிரியர்கள், இப்பொழுது கள்ளுக்கு எதிர்ப்புக் காட்டும் நோக்கத்துடன், 'கசிப்பை' நாடியுள்ளார்கள்! இவர்களின் மனமாற்றத்துக்கும், எதிர்ப்புக்கும் கள்ளின் விலை ஏற்றமே காரணம் எனக் கூறப்படுகிறது.

அளுத்கமவிலுள்ள கள்ளுத் தவறணையில் முன்னர் ஒரு போத்தல் கள்ளு 60 சதமாக விற்கப்பட்டது. ஆனால் இவ்வருடம் ஜனவரி மாதம் முதல் திகதியிலிருந்து கள்ளு ஒரு போத்தலின் விலை ரூ. 1.20க்கு அதிகரித்துள்ளது. இதன் காரணமாக கள்ளுக்கு இருந்த மதிப்பு குறைந்துபோய் தினமும் கள்ளு மிஞ்சவேண்டிய நிலை ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து கள்ளு ஒரு போத்தலின் விலை ரூ. 1-க்கு குறைக்கப்பட்டது.

ஆனால் கள்ளுப் பிரியர்களின் மனம் கல்லாக மாறிவிட்டது. கள்ளின் விலை வழக்கமான விலைக்கு வரும்வரை கள்ளுக்கு எதிர்ப்புக்காட்டுவதென்று தீர்மானித்துவிட்டார்கள். கள்ளை மறந்து இவர்கள் 'கசிப்பு'க்கு ஆதரவு கொடுத்தார்கள். 'கசிப்பு' கிடையாவிட்டல் அதிலும் கொடிய மதுபானங்களை இவர்கள் அருந்துகிறார்கள்!

## நான்கு வயதுக் குழந்தையின் பரிதாப மரணம்

கண்டி, செவவாய்

நான்கு வயதுள்ள பெண் குழந்தையொன்று எரிகாயங்களுடன் கண்டி ஆஸ்பத்திரியில் மரணமானது. ஒரு துண்டுப் பாணை நெருப்பில் வாட்டும் பொழுது, எதிர்பாராதவிதமாக குழந்தையின் உடையில் தீ பிடித்துக கொண்டதாக நம்பப்படுகிறது.

மரண விசாரணையின் போது இறந்த குழந்தையின் தந்தை திரு. ஏ. எஸ். டி' சில்வா பின்வருமாறு தெரிவித்தார். "தாத்தா ... தாத்தா ... என்று குழந்தை அழுததைக் கேட்ட நான், குசினிக்குள் ஓடோடிச் சென்றேன். அங்கு எனது மகளின் உடைகள் தீப்பற்றிக் கொண்டிருந்ததைக் கண்டேன்."

விசாரணை முடிவில் எரிகாயங்களினால் குழந்தை மரணமானது எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## புகையிரத விபத்து வழக்கு

குருநாகல், செவ்வாய்

வவனியா, புகையிரத விபத்து வழக்கு. குருநாகலில் அசைஸ் கமிஷனர் திரு. ஏர்வி விஷயவர்த்தன முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சமயம், பலர் சாட்சியமளித்தனர்.

சட்டத்துக்கு விரோதமாக கூட்டம்கூடி கே. கே. எஸ்.- கொழும்பு இரவு புகையிரதத்தைக் கவிழ்க்கச் சதிசெய்ததாகவும் அந்தப் புகையிரதத்தில் பிரயாணம் செய்த திரு. ஆர். ஆர். எட்வேட் என்பவருக்கு காயம் விளைவித்துக் கொலை செய்ததாகவும் வை. எம். டிங்கிரிபண்டா, பீட்டர் பியதாசா, விஜயக்கூன் குணபாலா, வீரசேகர சைமன், டபிள்யூ. ஏ. சுமதிபாலா ஆகிய ஐந்துபேர் மீதும் 12 குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன,

# தமிழரசு தி.மு.க.வை ஆதரியாது

## அடையாளமிடும் புதியமுறை

இப்பொழுது நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் முதன் முதலாக இந்தியா முழுவதிலும் வாக்குச் சீட்டுக்களில் அடையாளமிடும் புதிய முறை கையாளப்படவிருக்கிறது. பஞ்சாப் உபதேர்தலின்போது பரீட்சார்த்தமாக இம்முறை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இப்புதிய முறைப்படி சுமார் இருபது லட்சம் வாக்குப் பெட்டிகள் இப்போது மிச்சமாகிவிட்டன. அவற்றையெல்லாம் தேர்தல் கமிஷன் ஏலம் போட வேண்டியிருக்கும். இப்போது 21 கோடி வாக்காளர்களுக்கு ஐந்து லட்சம் வாக்குப் பெட்டிகள் போதும். ஒவ்வொரு அபேட்சகருக்கும் தனித்தனியாக வாக்குப் பெட்டியை ஒதுக்கி, அதில் சின்னங்களை ஒட்டும் முறை இப்போது கைவிடப்பட்டுவிட்டது. வாக்குச் சாவடியிலுள்ள ஒரு பெட்டியிலேயே மக்கள்சபை, ராஜ்ய சட்டசபை இரண்டுக்கும் எல்லா அபேட்சகர்களுக்கான வாக்குகளையும் போட வேண்டும்.

இப்புதிய முறைப்படி தேர்தல் விரைவாக நடைபெறும். 20 லட்சத்துக்கும் அதிகமான வாக்குப் பெட்டிகளை நாடு முழுவதும் எடுத்துச் சென்று விநியோகிக்க வேண்டியிராது. வாக்குப் பெட்டியில் யாரேனும் விஷமம் செய்யலாம் என்ற அனாவசியமான சந்தேகத்துக்கும் இடமிருக்காது. வாக்காளர் எவரும் தமது வாக்குச்சீட்டை யாருக்கும் தெரியாமல் வெளியே கொண்டுவந்து விற்கவும் முடியாது.

எழுத்தறிவில் முன்னேற்றமடைந்துள்ள நாடுகளில் கையாளப்படும் சாதாரண முறையோடு அடையாள முறையும் சேர்ந்ததே இந்த முறையாகும். எழுதப் படிக்கத் தெரியாதவர்களுக்காக அடையாளங்கள் இன்னமும் வைத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

## தலைவர்களுக்குப் பலத்த போட்டி

தமிழ்நாடு பொதுத் தேர்தலில் பல்வேறு கட்சிகளையும் சேர்ந்த முக்கிய தலைவர்களுக்கும் அமைச்சர்களுக்கும் பலத்த போட்டிகள் ஏற்பட்டிருக்கின்றன. முதலமைச்சர் திரு. காமராஜரை எதிர்த்து ஐவர் அபேட்சை மனுக்கள் தாக்கல் செய்துள்ளனர். அமைச்சர் திரு. சுப்பிரமணியத்தை எதிர்த்தும் ஐவர் போட்டியிடுகின்றனர். திருச்செந்தூர் தொகுதியில் போட்டியிடும் 'நாம்தமிழர்' கட்சித் தலைவர் திரு. ஆதித்தனரை எதிர்த்து ஒன்பது பேர் மனு தாக்கல் செய்துள்ளனர். தி. மு. க. தலைவர் திரு. அண்ணாத்துரையை எதிர்த்து நால்வரும் தி. மு. க திரு. கருணா

## தமிழகமும் பொதுத்தேர்தலும்

நிதியை எதிர்த்து ஐவரும், தமிழ்நாடு பி. சோ. கட்சித் தலைவர் திரு. சின்னத்துரையை எதிர்த்து அறுவரும் நடிகர் திரு. ராஜேந்திரனை எதிர்த்து அறுவரும் மந்திரி திரு. சுப்பராயனை எதிர்த்து ஐவரும், தமிழ் தேசியக்கட்சித் தலைவர் திரு. சம்பத்தை எதிர்த்து நால்வரும், பார்வார்டு பிரஷாக் கட்சித் தலைவர் திரு. முத்துராமலிங்க தேவரை எதிர்த்து நால்வரும், ராஜாஜியின் மகன் திரு. நரசிம்மனை எதிர்த்து இருவரும் மனுக்கள் தாக்கல் செய்துள்ளனர்.

## கிருஷ்ணகிரியில் ராஜாஜி கட்சியின் நிலை?

கிருஷ்ணகிரித் தொகுதியில் ராஜாஜியின் மகன் திரு. சி. ஆர் நரசிம்மன் காங்கிரஸ்கட்சியின்அபேட்சகராகப்போட்டியிடுவது தெரிந்ததே! இவரை எதிர்த்து தி. மு. க. அபேட்சகராக திரு. கே. ராஜாராமும், சுயேச்சையாக திரு. டி.டி. பாலகிருஷ்ணனும் போட்டியிடுகின்றனர். இத்தொகுதியில் ராஜாஜியின் சுதந்திரக்கட்சி அபேட்சகரை நிறுத்தவில்லை. தன் அபேட்சகர்களை நிறுத்தாத பல தொகுதிகளில் காங்கிரசுக்கட்சிக்கு எதிராக சுதந்திரக்கட்சி பலருக்கு ஆதரவு தெரிவித்துள்ளது. இத்தொகுதியைப் பொறுத்தவரை சுதந்திரக்கட்சியின் நிலைமை இன்னமும் வெளிப்படுத்தப்படவில்லை.

## தமிழரசு மகாநாடு

வேலூரில் நடைபெற்ற தமிழரசுக் கழக மகாநாட்டில் 'வருகிற பொதுத்தேர்தலில் தி, மு. க.வை ஆதரிக்கமாட்டோம்' என்று கழகத் தலைவர் திரு. ம. பொ, சிவஞானம் அறிவித்துவிட்டார். எக்கட்சிக்கு தனது ஆதரவைக்கொடுப்பதென்று இந்த மகாநாட்டில் முடிவுசெய்யபபடுமென அறிவிக்கப்பட்டிருந்தது. காங்கிரஸ் கட்சியும் தி. மு. க. வும் நேரடியாகப் போட்டியிடும் தொகுதிகளில் காங்கிரஸ் கட்சியை ஆதரிக்குமென்றும், பல்வேறு கட்சிகள் போட்டியிடுவதால், எந்தெந்தத் தொகுதிகளில் யார் யாரை ஆதரிப்பது என்பதுபற்றிய பட்டியலை வெளியிடுவதென்றும் இம் இம்மகாநாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் பிரிவினைக் கருத்தை இரண்டாந்தரமாகக் கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கட்சியை தமிழரசுக்கழகம் ஆதரிக்கும் என்பது தெரிவிக்கப்படவில்லை. ஆனால் திருவாளர்கள் சம்பத், சிவஞானம், ஈ. வே. ரா. இவர்களுக்கிடையான இன்றைய தனிப்பட்ட உறவு தமிழ்த்தேசியக் கட்சிக்குச் சில இடங்களில் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்துமா என்பது பொறுத்திருந்தே தெரிந்துகொள்ளவேண்டியுள்ளது.

## சிவாஜி கணேசன் தேர்தல் நிதி

ராஜாஜியின் சுதந்திரக்கட்சிக்கு சிவாஜி கணேசன் இருபதினாயிரம் ரூபாய் தேர்தல் நிதியாக வழங்கமுன் வந்திருக்கிறார். ஆனால் காங்கிரஸைத் தவிர்ந்த ஏனைய கட்சிகளுக்கு அவரது வாக்குப்பதிவாகுமா என்பதே பலரதும் கேள்விக்குறியாகும்.

## வானொலியில் ராஜாஜி தேர்தல் கதை

பொதுத்தேர்தல் நடைபெறுவதையொட்டி தேர்தல் கமிஷன் அளித்துள்ள வானொலி பிரசார வசதியை சுதந்திரக்கட்சி பயன்படுத்தும். வானொலி வாய்ப்பை பயன்படுத்த பி. சோ. க., கம்யூனிஸ்ட், தி. மு. க. மறுத்துவிட்டனஎன்பது தெரிந்ததே! ஆனால், தான் அப்படிச் செய்யப்போவதில்லையென்றும் தமக்குக் கிடைத்த ஐந்து நிமிடத்தையும் பயன்படுத்திக்கொண்டு தனது கதையைக் கூறப்போவதாகவும் ராஜாஜி தெரிவித்துள்ளார்.

# பிரிவினை உணர்ச்சிக்கு கிராமணியார் கண்டனம்

வேலூர், ஜன. 23

"மாநில சுய ஆட்சி மொழி வழிமாநிலம் அமைப்பதுஎன்று அறிவிக்கப்பட்ட கொள்கையினின்றும் காங்கிரஸ் இப்போது பின் வாங்குகிறது" என்று தமிழரசுக் கழகத்தலைவர் திரு. ம. பொ. சிவஞானகிராமணியார் கூறினர்.

இங்கு மாநிலசுயாட்சி மாநாட்டில் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:-

"காங்கிரஸ் கட்சிக்கு மக்கள் சபையிலும், சட்டசபைகளிலும் ஏராளமான பெரும்பான்மை உள்ளது. எனவே அது மக்களுடைய விருப்பத்தை மதிக்காமல் கொடுங்கோலோச்சுகிறது. தமிழ்த் தேசியக்கட்சி, மக்கள் சோஷலிஸ்ட் கட்சி, பொதுவுடைமைக்கட்சி அனைத்தும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டிருப்பது மாநில சுய ஆட்சியைஅடையும் முயற்சிக்கு தமிழரசுக்கழகம் தலைமை தாங்கியுள்ளது என்பதை உணர்த்துகிறது.

இந்தியா முழுவதும் ஒற்றுமையாக ஒரே இந்தியராக இருக்கவேண்டும் என்பதையே தமிழரசுக்கழகம் ஆதரிக்கிறது. பிளவு மனப்பான்மைகள் அனைத்தையும் கழகம் எதிர்க்கிறது.

இந்தியாவிலிருந்து பிரிந்து போகும் உரிமையைத் தமிழ்த் தேசியக்கட்சி கோருவது நாட்டின் முன்னேற்றத்திற்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் தீங்கு விளைவிப்பதாகும். அத்தகைய உரிமை கோருவது தற்கொலை முயற்சிக்கு ஒப்பாகும்.

**ஈ. வி. கே. சம்பத்**

"கண்டிப்பான சூழ்நிலை ஏற்பட்டால் இந்திய அரசிலிருந்து பிரிந்து போகும் உரிமையை தமிழ்த்தேசியக்கட்சி வலியுறுத்தாது" என்று தமிழ்த்தேசியக் கட்சித்தலைவர் திரு. ஈ. வி. கே. சம்பத் தெரிவித்தார்.

பிரிவினை மனப்பான்மைக்கு எதிராகத் தம்முடைய கட்சியும் போராடும் என்று திரு. சம்பத் மேலும் கூறினர்.

## கன்னிகளுக்கு பயந்த காளை

லண்டன், ஜன. 23

எந்த நிலைமையிலும் கல்யாணம் செய்து கொள்ளக் கூடாது என்கிற நிபந்தனை மீது காப்டன் டக்ளஸ் நெய்லர் என்பவருக்கு 50,000 பவுன் கிடைத்தது. 40 வயதுள்ள இந்தப் பிரம்மச்சாரியை 'வலை போட்டு' பிடிப்பதில் ஏராளமான பெண்கள் தீவிரமாக ஈடுபடலானர்கள். அவரைக் கல்யாணம் செய்து கொண்டு அவருடைய பணத்தை 'அடித்து' விடவேண்டுமென்பது தான் அவர்களுடைய நோக்கம்.

இந்தப் பெண்களுக்குப் பயந்த கேப்டன் டக்ளஸ் இத்தாலிக்கு ஓடிவிட்டார்.

91 வயதான விவாகம் செய்து கொள்ளாத ஒருகன்னி மூதாட்டி காப்டன் டக்ளஸ்ஸுக்கு மேற்கூறிய நிபந்தனை மீது 50 ஆயிரம் பவுன் சேர வேண்டும் என்று உயில் எழுதிவைத்தார். உயில் விவரங்களைப் பத்திரிகைகளில் பிரசுரித்தார்:

வந்தது ஆபத்து. காப்டன் டக்ளஸுக்குக் கூடை கூடையாகக் கடிதங்கள் வர ஆரம்பித்தன. நூற்றுக் கணக்கான பெண்கள் அவரைக் கலியாணம் செய்துகொள்ள விரும்புவதாக அவருக்குக் கடிதங்கள் எழுத ஆரம்பித்து விட்டனர். தொல்லை பொறுக்க மாட்டாமல் டக்ளஸ் ஓடிவிட்டார்.

## பிரி. ஹொண்டுராய்

லண்டன், ஜன. 23

பிரிட்டிஷ் ஹொண்டுராயில் இளைஞர்கள், பிரிட்டனுக்கெதிராய் ஆர்பாட்டம் செய்து, "யூனியன் ஜாக்" கொடியைக் கிழித்தெறிந்தனர்.

## அல்ஜீரியாவில் பலாத்காரம் வளர்கிறது

அல்ஜீரியா ஜன, 23

அல்ஜீரியாவில் வளர்ந்து வரும் பலாத்கார நடவடிக்கைகளைச் சமாளிக்க பிரஞ்சு அரசாங்கம் கடும் நடவடிக்கை எடுத்திருக்கிறது. 3 நகரங்களில் ஊரடங்குச் சட்டங்களும், ரஸ்தாக்களுக்குத் தடையும் ஏற்படப்பட்டுள்ளன.

## ஜப்பான் இளவரசர் தம்பதிகள்

கல்கத்தா, ஜன. 23

ஜப்பானிய இளவரசர் தம்பதிகள் பாகிஸ்தானுக்குச் செல்லும்வழியில் இன்று கல்கத்தா வந்து சேர்ந்தனர்.

## மன்னர் மகேந்திரா

புதுடில்லி, ஜன. 23

நேபாள மன்னர் மகேந்திரா அடுத்தமாதம் அல்லது அதற்கடுத்தமாதம் இந்தியாவுக்கு விஜயம் செய்வார் என அறிவிக்கப்பட்டது.

## அமீர் இந்தியா வருகிறார்

புதுடில்லி, ஜன. 23

ஐக்கிய அரபுக் குடியரசின் உப ஜனதிபதி பீல்ட்மார்ஷல் அமீர் நாளை இந்தியா வருகிறார். பல தினங்கள் அவர் இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்வார்

## டெஹ்ரானில்

டெஹ்ரான், ஜன. 22

பாரசீகத்தில் எதிர்க்கட்சிகள் வேலை நிறுத்தத்தையும், ஆர்பாட்டத்தையும் நடத்துமாறு கோரியிருக்கின்றன. தலைநகரின் பல்வேறிடங்களில் ஆங்காங்கு கைகலப்புக்கள் ஏற்பட்டன.

# நேருவின் அயல்நாட்டு கொள்கைக்கு பக்ஷி பாராட்டு

## வட பம்பாயில் இந்தியாவின் கௌரவம் தங்கியுள்ளதாம்

பம்பாம், ஜன. 23

"இந்திய பாதுகாப்பு மந்திரி ஸ்ரீ வி. கே. கிருஷ்ணமேனனும் ஸ்ரீ கிருபளானியும் போட்டியிடும் வடக்கு பம்பாய் தொகுதி தேர்தல் விசேஷ முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. ஏனென்றால், சர்வதேச விவகாரங்கள், இந்திய தேசிய பிரச்சினைகள் ஆகிய அனைத்திலும் இந்தியாவின் கொள்கையே—ஏன், இந்தியாவின் கௌரவமே அங்கே தொங்கி நிற்கிறது" என்று காஷ்மீர் பிரதமர் ஸ்ரீ பக்ஷிகுலாம் முகமது இங்கு கூறினர்.

வடக்கு பம்பாய் பகுதியிலுள்ள குர்லா என்ற இடத்தில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டமொன்றில் ஸ்ரீ பக்ஷிகுலாம் முகமது பேசினர்.

"காங்கிரஸ அபேட்சகர்களையே பெரும்பான்மை பெறும்படி மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும். அப்படித் தேர்ந்தெடுத்தால்தான் இந்தியாவில் ஒரு ஸ்திரமான அரசாங்கம் அமைய முடியும்" என்று அவர் கூறினர்.

"இன்றுள்ள சூழ்நிலையில் காங்கிரஸ் கட்சி ஒன்று மட்டுமே திறமையான அரசாங்கத்தை நடத்த முடியும்" என்றூரவர். காஷ்மீரில் எல்லாம் சிறந்த முறையில் நடைபெறுகின்றன என்ற அவர், அதனல்தான் பொதுத் தேர்தல் நடக்கும் இந்தச் சமயத்தில் தான் குர்லாவில் இருக்கிறேன் என்று வேடிக்கையாகக் கூறினர்.

காஷ்மீர் விவகாரத்தைப் பாகிஸ்தான் ஐ. நா. பாதுகாப்புக் கவுன்சிலுக்குக் கொண்டு சென்றிருப்பதுபற்றி குறிப்பிட்ட அவர் பாதுகப்புக் கவுன்சிலோ அல்லது வேறு கவுன்சிலோ எதுவானல் என்ன, இந்தியா காஷ்மீர் நிலை அன்று முதல் இன்று வரை மாறவில்லை. அந்தநிலை என்றுமே மாறப்போவதுமில்லை என்று கூறினர்.

காஷ்மீர் இந்தியாவின் பகுதியே என்பதைக் குறிப்பாக உணர்த்தும் வகையில் உண்மையான "பாதுகாப்புக் கவுன்சில்" நியுயோர்க்கில் இல்லை. அது குர்லாரிலும் ஸ்ரீநகரிலும் தான் இருக்கிறது என்று ஸ்ரீ பக்ஷிகுலாம் முகமது கூறினர்.

சர்வதேச அரங்கில் இந்தியப்பிரதமர் நேரு உருவாக்கிக் கொடுத்த கோஷ்டி சேராக் கொள்கை உலகத்தையே பாதுகாத்திருப்பதுடன் குறிப்பாக எந்த உலக புனதத்திலும் இந்தியாவை இழுத்துவிட்டுவிடாமல் காப்பாற்றியிருக்கிறது என்றூர்.

இந்திய அயல்நாட்டுக் கொள்கை பற்றிக் கூப்பாடுபோடுவோரை குறிப்பிட்டுப் பேசிய அவர் இன்றைய நிலையில் யுத்தம் மூண்டுவிடுமானல், இந்தியாவிற்கு சீர் செய்யமுடியாத பெருஞ் சேதம் ஏற்பட்டுவிடும். இந்திய அபிவிருத்தில ஆண்டுகளுக்கு தள்ளிப் போடப்பட்டுவிடும் என்றூர்.

பலம் வாய்ந்த நாடுகளான அமெரிக்கா, ரஷ்யா போன்றவைகளே ஏதோ போர்க்குரல் அவ்வப்போது கர்ஜனை புரிந்தாலும் யுத்தத்தைக் கண்டு அஞ்சி நடுங்குவதுடன் மிகப் பத்திரமாக யுத்தத்திலிருந்து ஒதுங்கிச் சென்றுகொண்டிருக்கும்போது, நமது கோஷ்டி சேராக் கொள்கையைச் சிலர் கண்டிப்பது விநோதமாக இருக்கிறது என்றூர்.

இந்தியாவைப் பாதுகாக்க அரசாங்கம் தவறிவிட்டதாகக் கூறும் சிலர் யுத்தத்தைப்பற்றி நினைத்துக்கொண்டே பேசுகிறூர்கள். அவர்கள் யுத்தத்தைப்பற்றி அழகான குளிர்ச்சி அறைக்குள் பத்திரமாக உட்கார்ந்துகொண்டு பேசும் ஆசாமிகள்தான் என்றூர்.

# தென்கிழக்காசிய ஆயுர்வேத ஆராய்ச்சி நிலையம்

## நேருவுடன் பேச சுகாதார மந்திரி செல்கிறூர்

சென்னை, ஜன. 23

தென் கிழக்காசியாவுக்கான ஆயுர்வேத ஆராய்ச்சி நிலையம் ஒன்றை இலங்கையில் அமைப்பதுபற்றி தாம் ஸ்ரீ நேருவுடன் பேசுவதற்காக புதுடில்லி சென்றுகொண்டிருப்பதாக இலங்கை சுகாதார மந்திரி திரு. ஏ. பி. ஜயசூரியா செனட்சபையில் கூறினர். இவ்விஷயத்தில் உதவியளிப்பதாக நேருஜி வாக்குறுதியளித்திருப்பதாயும் அவர் கூறினர். மலாயா சிங்கப்பூர் ஆகிய நாடுகளும் இத்திட்டத்திற்கு ஆதரவு அளித்துள்ளதென்றும், இரு நாட்டு அரசாங்கங்களுடனும் தாம் பேச்சுவார்த்தை நடத்தப்போவதாயும் திரு. ஜயசூரியா மேலும் தெரிவித்தார்.

## பாங்கொக்கில் சேரிகள் தீக்கிரை

பாங்கொக், ஜன. 22

பாங்கொக்கிலுள்ள சேரிப்புறமொன்று தீக்கிரையானதால் ஆயிரக்கணக்கான மக்கள் வீடற்றவர்களாகியுள்ளனர். ஆயிரத்துக்கு மேற்பட்ட வீடுகள் தீக்கு இரையாகிவிட்டனவாம்.

கிராமப்புறமாகையால் ஒடுக்கமான ஒழுங்கைகளில் சென்று தீயணைப்புப்படை தீயை அணைத்துக்கொள்ளமுடியவில்லை. சேரி முழுவதுமே பற்றிக்கொண்ட தீயை அணைக்கச் சுமார் நாலு மணித்தியாலங்கள் எடுத்தனவாம்.

சுமார் 170,000 பவுண் பெறுமதிக்கு சேதமடைந்துள்ளது எனத்தெரிகிறது. இனந்தெரியாத வயோதிபர் ஒருவர் தீக்குள் அகப்பட்டுக்கொண்டார்.

## டென்மார்க் பிரதமர்

ஆக்ரா, ஜன. 23

காஷ்மீர் உட்பட தேசங்களிடையேயுள்ள சகல பிரச்சினைகளையும் ஐ. நா. மூலம் தீர்த்துக்கொள்வதென்ற விஷயத்தில் தாமும், ஸ்ரீ நேருவும் இணங்கியுள்ளதாக டென்மார்க் பிரதமர் அறிவித்தார். அவர் இன்று பம்பாய் புறப்பட்டுச்சென்றூர். ஸ்ரீநேருவுடன் காஷ்மீர், ஜெர்மனி, பெர்லின் ஆயுதப்பரிகிரணம் ஆகியன பற்றிப் பேசியதாயும், இப்பேச்சுவார்த்தைகள் தனக்குத் திருப்தியளித்துள்ளதாயும் அவர் கூறினர்.

## நாகாலந்து நிலைமை

புதுடில்லி, ஜன. 23

நாகாலந்தின் பொதுவான நிலைபற்றி ஆராயுமுகமாக மார்ச் 1-ம், 2-ம் திகதிகளில் பொதுக்கூட்டம் ஒன்றை நடத்துவதென இடைக்கால ஆட்சிசபை தீர்மானித்துள்ளது.

## கடாங்கா மீது புகார்

நியுயோர்க், ஜன .23

அந்நியக் கூலிப் படைகளை வெளியேற்றவேண்டுமென்ற ஐ. நா. தீர்மானத்தை அமுல் நடத்த கடாங்கா அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை என பாதுகாப்பு சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## தேர்தல் கமிஷனர் அறிவுறுத்து

புதுடில்லி, ஜன. 23

தேர்தல்கள் பாரபட்சமற்ற முறையில் நடக்குமாறு பார்த்துக்கொள்வது உயர் அதிகாரிகளின் கடமை என நேற்றிரவு ரேடியோவில் உரை நிகழ்த்திய பிரதம தேர்தல் கமிஷனர் திரு. சுந்தரம் அறிவித்தார்.

# நீரில் மூழ்கிய சட்டவிரோத குடியேற்றக்காரர்கள்

## திருச்செந்தூர் கோர்ட்டில் விசாரணை ஆரம்பம்

திருநெல்வேலி, செவ்வாய்

இலங்கையில் குடியேற கள்ளத்தோணிகள் மூலம் சென்றதில் 16 பேர் நீரில் மூழ்கி இறந்தது சம்பந்தமாக தொடரப்பட்ட வழக்கின் பூர்வாங்க விசாரணை திருச்செந்தூர் சப் மாஜிஸ்திரேட்கோர்ட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் அரசாங்க தரப்பில் 7 பேர் மீது குற்றம் சாட்டப்படடுள்ளது. வழக்கு விபரம் வருமாறு:-

தங்கவேலுவும் ராஜாமணியும் கள்ளத்தனமாக இலங்கையில் குடியேற விரும்புகிறவர்களை ஏற்றிச்செல்ல சூசைக்குச் சொந்தமான நாட்டுப்படகொன்றை அமர்த்தினர். நபருக்கு ரூபா 100 வீதம் 36 பேரைச் சேர்த்தனர். இதில் பெரும்பாலோர் திருநெல்வேலியைச் சேர்ந்தவர்கள்.

1960ம் ஆண்டு ஆகஸ்டு 19ம் திகதி இரவு குலசேகரன்பட்டினம் பொலிஸ் பகுதி மணப்பாட்டிலிருந்து இந்த நாட்டுப் படகு இலங்கை நோக்கிப் பயணமாகியது. 23-ந் திகதி இலங்கைக் கரையிலிருந்து 1 மைல் தொலையில் படகு இருக்கையில் பிரயாணிகள் நீரில் குதித்துக் கரைசேர நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். கடல் ஆழத்தில் கதிகலங்கியவர்கள் மீண்டும் படகில் ஏறிக்கொள்ள முயன்றனர். எதிரிகள் உருவிய கத்தியைக்காட்டி அச்சுறுத்தினர். 4 பேர் தவிர இதர 32 பேரைக் கடலில் அநாதையாக விட்டுவிட்டுப் படகு வந்தவழி திரும்பியது.

இதில் 16 பேர் இறந்தனர். இவர்களின் சடலம் இலங்கைக் கரையில் கைப்பற்றப்பட்டது. முதல்நாள் விசாரணையில் சம்பவத்தை நேரில் பார்த்த திரு. ரத்தினபாண்டி சாட்சியமளித்தார்.

## ஆச்சிரமத்துக்கு அத்திவாரக்கல்

பழனி, திங்கள்

பழனி பழனி ஆண்டவர் ஆச்சிரமத்திற்கனெ பிரார்த்தனை மண்டபம் ஒன்று அமைக்கப்படும் இதற்கான அத்திவாரக் கல்லை என்ஜினியர் திரு. எஸ். நடேசனும் பழனிப்பகுதி காரியாதிகாரி திரு. இ. சிதம்பரப்பிள்ளையும் நாட்டிவைத்தனர். 21-1-62 ல் நடைபெற்ற இவ்விழாவிற்கு வவனியா காரியாதிகாரி திரு. தி. முருகேசம்பிள்ளை தலைமை தாங்கினர்.

### மணி வாக்கு

"பகைமையைப் பகைமையினால் தணிக்கமுடியாது. அதனை அன்பினாலேயே தணிக்க முடியும். இதுதான் தொன்று தொட்டு வருகின்ற தர்மம்."

ஈழநாடு
EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு
தை மீ 11௳ (24 - 1 - 62)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389

## கொழும்புத் திட்டம்

**தெ**ன்கிழக்கு ஆசிய நாடுகள் சென்ற பத்து ஆண்டுகளில் பொருளாதாரத்துறையில் விருத்தியடைவதற்குக் கொழும்புத்திட்டம் பேருதவியாக இருந்து வந்துள்ளது. சர்வதேசிய அடிப்படையில் உருவாக்கப்பெற்ற இத்திட்டமின் தங்கிய நாடுகளுக்கு உதவியளித்து வருகின்றது. இலங்கையுட்பட இந்தியா, பாகிஸ்தான், பர்மா, மலேயா, சிங்கப்பூர், இந்தோனேஷியா போன்ற பல ஆசிய நாடுகள் இத்திட்டத்தால், பெரும்பயன் அடைந்துள்ளன.

புதிய தொழில்களை ஆரம்பித்து நாட்டின் இயற்கைவளங்களைப் பயன்படுத்தவும், இளைஞர்களுக்குத் தொழில் வாய்ப்புக்களை அளிக்கவும் இத்திட்டம் வழிசெய்கின்றது அத்துடன் தொழில் நுட்பத்துறைகளில் நிபுணர்களைக்கொடுத்து உதவியும் வருகின்றது.

தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்குச் சென்ற பத்து ஆண்டுகளில் ரூ. 4,750 கோடி மதிப்புள்ள உதவி கிடைத்திருக்கின்றதென இத்திட்டம் பற்றி வெளியாகியுள்ள அறிக்கை கூறுகிறது.

இலங்கையில் சென்ற பத்தாண்டுக் காலத்தில் எத்தனையோ புதிய தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டன. விவசாயத் துறையில் புதிய முறைகளைக் கையாளவும் வெளிநாட்டு நிபுணர்களின் யோசனைகளைப்பெறவும் இத்திட்டம் உதவியுள்ளது. இவ்வாறே ஏனைய தென்கிழக்காசிய நாடுகளும் விருத்தியடைந்து வருகின்றன. பொருளாதாரத் துறையில் வளர்ச்சியுற்று வரும் இந்நாடுகளிடையே அரசியல் வேறுபாடுகள் இருப்பினும் அடிப்படையான சில அரசியல் கொள்கைகளில் ஒருமைப்பாடு ஏற்படவும் இத்திட்டம் வழி வகுத்துள்ளதெனக்கூறின் அது மிகையாகாது. உலகில் இன்று நிலவிவரும் கலகநிலை அகலுமாயின் வேறு பல திட்டங்களும், விரிவான முறையில் பின்தங்கிய நாடுகளுக்கு உதவி புரியுமென எதிர்பார்க்கலாம்.

## கலைவளர்ச்சி

அந்நிய ஆட்சி இலங்கையில் நிலவிய காலத்தில் சொந்தக் கலையும் கலாச்சாரமும் அவற்றுக்குரிய சிறப்பைப் பெறவில்லை. ஆங்கிலத்தைப் பயின்று அரசாங்கத்தில் சேவை புரிவதே வாழ்க்கையின் இலட்சியமாக இருந்துவந்தது. இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் சொந்த நாட்டுக் கலையும் கலாச்சாரமும் பலதுறைகளிலும் விருத்தியடைந்து வருகின்றன. அரசினரின் ஆதரவு கலைகளின் வளர்ச்சிக்கு இருந்துவருவதுடன் மக்களிடையேயும் கலையார்வம் இந்நாட்களில் மிகுதியும் ஏற்பட்டுவருவது மகிழ்ச்சிக்குரியது.

சமீபத்தில் இங்கு நடைபெற்ற யாழ்ப்பாணம் அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்தின் தமிழிசை விழாவுக்குத் தலைமை தாங்கிய வடபகுதி உதவி வித்தியாதிபதி திரு. எஸ். யூ. சோமசேகரம் கலை, கலாசாரத் துறைகளை நாம் பேணி வளர்க்கவேண்டிய அவசியத்தைக் குறிப்பிட்டிருந்தார். ஒவ்வொரு சந்ததியாரும் தங்கள் நாட்டை தாம் தமது முந்திய சந்ததியாரிடமிருந்து பெற்றதை விடச் சிறந்ததாகத் தமக்குப் பின்வரும் சந்ததியினருக்கு விட்டுச் செல்வது அவர்களது முக்கிய கடமையென வித்தியாதிபதி கூறியிருப்பதைக் கலைவளர்ச்சியிலும் அதன் ஆக்கத்திலும் அக்கறையுள்ளவர்கள் வரவேற்பார்கள்.

எங்கள் நாட்டில் இசைக் கலைஞர்களிடையே ஏற்பட்டுள்ள விழிப்புணர்ச்சியின் பேருக எத்தனையோ சங்கங்களும் சபைகளும் நாட்டில் தோன்றியிருக்கின்றன. இச்சங்கங்கள் எல்லாம் ஒன்று கூடி தமக்குள்ளே ஒரு மத்திய சங்கத்தை ஏற்படுத்துமாயின் அரசாங்கத்தின் ஆதரவைப் பெருமளவுக்குப் பெறுவதுடன் கலை ஆக்கத்துக்காகச் சில திட்டங்களையும் வகுப்பது சாத்தியமாகும். உதவி வித்தியாதிபதி தெரிவித்திருப்பது போல இன்றைய நிலையில் தமிழ்மக்கள் தமது பாரம்பரியமான கலைச்செல்வங்களைப் பாதுகாக்கவேண்டிய அவசியம் இன்றுபோல் முன்னர் ஒருபோதும் ஏற்பட்டதில்லை. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அரசாங்கத்தின் ஆதரவு பெறுவதற்கும் நாட்டிலே இரசிகத்தன்மையைப் பெருக்குவதற்கும் கலைஞர்கள் ஒன்றுகூடி உழைப்பார்கள் என நம்புகின்றோம்.

# எட்டுக் கிரகங்களின் சேர்க்கை

## உலகில் ஏற்படவிருக்கும் மாற்றங்கள்

(வே. சுவாமிநாதன்)

இற்றைக்கு 3000 வருடங்களுக்கு முன் இந்தியாவில் சகுராஷ்டிர குலத்தில் அவதரித்து அதற்குமுன் இருந்த நாடி ஏடுகளின் பிழைகளைத் திருத்தியமைத்த காக்கைப் புஷண்டரின் ஏட்டில் காந்தர்வ குலத்தவரான ஐரோப்பியர்பூமியின் கீழ்ப்பாகத்தில் 400 வருடம் ஆளுவதையும், 1910-ல் அலீஸ் கொம்மெற் தோற்றிய பின், உலகில் நடந்த முதலாம், இரண்டாம் உலகயுத்தத்தையும், காந்தி அடிகளின் சத்தியாக்கிரகத்தால், பாரதம் சுயராச்சியம் பெற்றதையும், இந்தியா சுயராச்சியம் பெற்றபின் ஹிந்தியென்னும் மொழியால் ஆளப்படும்போல் இருக்கையில் அஷ்டக்கிரகங்களும் மகர ராசியில் கூடப்போவதையும், அக்காலம் உலகில் நிலவும் அட்டூழியங்களையும் பற்றி 'ஈழநாடு' 14-12-61 இதழில் எழுதியிருந்தேன்.

எட்டுககிரக சேர்க்கைக்குப் பின் 21-9-62 ல் ஆரம்பிக்கப் போவதாய்க் கூறப்பட்டுள்ள பிரம கற்பத்தைப்பற்றியும், சூரிய சாவரணிமனுவைப்பற்றியும், அக்காலம் உலகில் தோன்றி அமைதி நிலைநாட்டப் போகும் அவதார புருஷனைப் பற்றியும் இப்போது எழுதுகின்றேன்.

எட்டுக்கிரகங்களும் மகர ராசியில் கூடியபின், உலகில் அமைதியின்மை அதிகரிக்கும். அக்காலம் காக்கைப்புஷண்டரால் கூறப்பட்ட அவதார புருஷனின் பிறிக்தயோகமும் சித்தியாகும். அந்த யோகம் 21-9-62 ன் பின்பே சித்தியாகுமெனக் கூறப்பட்டுள்ளது. அப்போது பிரம கற்பமும் சூரிய சாவரணி மனுவும் ஆரம்பமாகும்

காக்கைப்புஷண்டர் பின்வருமாறு அவதார புருஷனின் சாதகத்துள்ள கிரகங்களின் நிலையைக் குறித்துள்ளார்.

| | | | |
|---|---|---|---|
| வி | 8 | 9 | செ சு |
| கே | ராசி | | பு கு |
| சந் | | | ரா |
| 4 | சனி | 2 | ல |

இம்மகான் பிறிக்த யோகத்தில் சித்தியடைந்தபின், அவரின் தூலசரீரம், அழிவுறுந் தன்மையைப் பெறும்.

அந்த யோகம் சூரியனின் தன்மையை மாற்றி வேறு சூரியனுக்கவல்லது.

அனுதிவஸ்துவே இந்த மார்க்கத்தைச் செய்தாரென உலகம் அறியவரும்.

பதஞ்சலி முனிவர் கூறிய யோகத்திலும் பார்க்க, இது ஒருபடி கூடியது. தூலதேகத்தை அழியாது பேணும் முறை இந்த பிறிக்த யோகத்திற்கிருப்பதால், இது பதஞ்சலி யோகத்திலும் கூடியது.

ஓர் புதுமுறையான சுவாசிக்கும் தன்மையை இந்த யோகம் ஏற்படுத்தும். தெய்வத்தை அறிவதற்கு இந்த தூல உடலை அழியாது வைத்திருப்பதற்கே, இந்த யோகம் தோற்றுவிக்கப்பட்டது.

இதுவரை உலகிலுள்ள தததுவ சாஸ்திரங்களையும் மார்க்க பேதங்களையும், இந்த யோகம் மாற்றியமைக்கும்.

இவை நடந்தேறிய பின், முன் கூறியபடி நவக்கிரகங்கள் ராசி மாறுவதால் வினையும் சுகதுக்கங்கள் பலனற்றுப் போகும்.

அப்போது பதியே யோகிகளைக் காப்பாற்றுவார்.

ஒவ்வொருவரின் தன்மைக்கேற்ப அவர்கள் அரசசேவையில் பங்கு ஏற்பர். அரசில் வாக்குவாதம் இராது. சாப்பாட்டுக்குறை இராது. வருத்தம் இராதபடியால் ஆஸ்பத்திரிகள் கட்டவேண்டிய தேவையிராது.

எல்லாத்தேவைகளும் தீர்க்கப்படுவதால் பணம் சேர்த்து வைக்க வேண்டிய தேவை ஏற்படாது.

பூமி தெய்வலோகம் போல் காட்சியளிக்கும்.

உலகில் இவை ஏற்படும் காலம், குரு மீனராசியில் சஞ்சரிக்கும். மறைந்து போன ரேவதிநட்சத்திரம் மறுபடியும் தோன்றுமெனக் கூறப்பட்டுள்ளது.

இராமாயணத்தில் அயோத்தியின் அரசு முறையைப்பற்றி கம்பன் கண்ட கனவும், ரஷ்யாவின் பிற்காலத்தைப் பற்றி அறிஞர் ரொல்ஸ்ரோய் கண்ட கனவும், பூர்வீக தமிழர், சங்க நூல்களில் கூறியபடி "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என மனிதவர்க்கம் எல்லாம் ஒன்று என்று கண்ட சமதர்ம கொள்கையும்; காக்கைப்புஷண்டரால் ஞானதிருஷ்டியில் கண்டு பாடப்பெற்ற கீழ்க் குறித்த பாடல்படி பலனும், கைவரப் பெற்றால் இனிமேல் சீவராசிகள் சமாதானமாயும் சந்தோஷமாயும் வாழமுடியுமென்பதற்கு ஐயமும் உண்டோ?

காப்பதுண்டு அவரவரின்
சக்தி போல
கமலனே யீந்தருள
ராச்சிய பாரம்
பார்ப்பதுண்டு அது காலில்
வழக்குமில்லை
பாரினில் சுகத்தினோர்
மருத்துவசாலை
ஏற்பதில்லை அது வொட்டி
யன்ன விசாரம்
எவர்க்குமில்லையே
அத்தனைப் பார்க்க
மீட்பதொரு ஆசையுமே
யற்றுப்போகும்
மேதினியில் வாழ்வதும்
விந்தையன்றே.

# "திருடனுடன் போராடி வெளியேற்றினேன்"

## மாஜிஸ்ட்ரேட் முன் பிக்கு சாட்சியம்

கம்பஹா, செவ்வாய்

"நான் திருடனுடன்போராடி எனது அறையிலிருந்து அவனை வெளியேற்றினேன். ஆனால் அவன் என்னைக் கத்தியால் குத்திவிட்டு ஓடி மறைந்துவிட்டான்."

தலகம ராஜ மகாவிகாரையைச்சேர்ந்த தெல்வெல விமலவன்ச தேரோவைக் கத்தியால் குத்திப் படுகாயம் விளைவித்ததாக மகுற என்ற இடத்தைச்சேர்ந்த ஈ. ஏ. சிரிபால என்பவர்மீது குற்றம்சாட்டி கம்பஹா அடிஷனல் மாஜிஸ்திரேட் திரு எஸ். டி. ஜயசுந்தரா முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கில் விமலவன்ச தேரோ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விமலவன்ச தேரோ மேலும் தெரிவித்தாவது: "1960ம் வருடம் செப்டம்பர்மாதம் 25ம் திகதி இரவு, நான் எனது அறைக்கதவைப் பூட்டிவிட்டு படுக்கைக்குச் சென்றேன். விடியற்காலை சுமார் 2-30 மணியளவில் ஏதோ சத்தமொன்று கேட்டதைத் தொடர்ந்து பக்கத்திலிருந்த டார்ச் வெளிச்சத்தை அடித்தேன். அப்பொழுது எனதுகட்டிலில் சிரிபால இருந்ததைக் கண்டேன். சிரிபாலா என்மீது பாய்ந்து டார்ச்சைப் பறித்துக்கொண்டு என் கன்னத்தில் குத்தினன். நான் சிரிபாலாவுடன் போராடி எனது அறையைவிட்டு அவனை வெளியேற்றினேன். வெளியே வந்ததும் எதிர்பாராதவிதமாக அங்கிருந்த குழியொன்றில் நாங்கள் இருவரும் விழுந்தோம். அப்போது நான் "திருடன்" "திருடன்" என்று கத்தினேன்.

எனது சத்தத்தைக்கேட்டு மற்ற பிக்குமார்கள் ஓடிவந்தனர். என்னை சிரிபால கத்தியால் குத்திவிட்டு ஓட்டம் பிடித்துவிட்டான். நான் பொலிசாரிடம் சென்று முறையிட்டேன். பின்னர் நான் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டேன்.

விசாரணை அடுத்த மாதம் 7ம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

---

## மாதர் சிசு சம்ரட்சணைக்கு 1,10,000 டாலர்

கொழும்பு, செவ்வாய்

இலங்கை அரசாங்கம் தனது மாதர் சிசு சம்ரட்சண சேவைகளைத் தொடர்ந்து நடத்தவும் அதுசம்பந்தமான பயிற்சிகள் அளிப்பதற்குமென ஐ. நா. குழந்தைகள் நிதியிலிருந்து 1,10,000 டாலர் பெறுகிறது.

மேலும் ஆசியாவுக்கென வழங்கப்படுகிற உதவிகளிலிருந்தும் இலங்கைக்கு 40 லட்சம் விட்டமின் மாத்திரைகள் கிடைக்கின்றன. இவை ஆஸ்பத்திரிகள், சுகாதார நிலையங்கள் மூலமாக, தேவைப்படும் குழந்தைகளுக்கும் தாய்மாருக்கும் வழங்கப்படும்.

# ராணி தீனுவின் சோகக் கதை

நியூயார்க், ஜன. 23

தன்னை மணம் செய்துகொள்ளாவிட்டால் ஜோர்டான் மன்னர் பதவியைத் துறந்துவிடுவதாகச் சொன்ன மன்னர் உசேன் மணமான பிறகு மாறிவிட்ட கதையை ராணி தீனு (மன்னர் உசேனின் முன்னுள் மனைவியார்) ஒரு பத்திரிகையில் எழுதி வெளியிட்டிருக்கிறார்.

ராணி தீனு எகிப்து நாட்டவர். 'ரெட் புக்' பத்திரிகையில் தம் திருமணம், விகாகரத்து ஆகிய விவரங்களைக் கூறியிருக்கிறார்.

1954ல் மன்னர் உசேனுக்கு வயது 17. தீனுவுக்கு வயது 24. தன்னை திருமணம் செய்துகொள்ளும்படியும் இல்லாவிட்டால் முடியை பிரிட்டிஷ் மன்னர் எட்டாவது எட்வர்டைப்போல் துறந்துவிடுவதாகவும் தம்மிடம் மன்னர் கூறியதாக தீனு தெரிவித்திருக்கிறார்.

அப்பொழுது மன்னர் பள்ளிச் சிறுவனைப்போலிருந்தார். தீனுவுக்கு மணம் செய்துகொள்ளும் எண்ணமுமில்லை; ராணியாகும் ஆசையுமில்லை. எனவே அவரின் கோரிக்கையை ஏற்க விரும்பாமல் திருமண ஒப்பந்தத்தையேனும் கொஞ்சக் காலம்வரை தள்ளிப்போடும்படி கேட்டுக்கொண்டார். மன்னரோ விடுவதாயில்லை. மணமில்லையென்றால் முடிதுறப்பதாகக் கூறிவிட்டார். ஒத்திப்போடவேண்டுமெனத் தீனு சொல்லியும் மன்னர் இத்திருமண விஷயத்தைக் குடும்பத்தாருக்குத் தெரிவித்தார். பின்னர் கொஞ்சக்காலம் சும்மா இருந்தார். ஓராண்டுக்குப்பிறகு ராணி தீனுவின் சம்மதமின்றித் தம் மண ஒப்பந்தத்தைப் பற்றி மன்னர் பகிரங்கப்படுத்திவிட்டார் என்று கட்டுரையில் கூறியிருக்கிறார்.

### அன்பில் மாற்றம்

பின்னர் தங்களுக்குள் திருமணமானபிறகு மன்னரின் அன்பில் மாறுதல் ஏற்பட்டது. அவர் எட்டிச் செல்வது போல் ராணிக்குத் தோன்றியது. துயர்மிகுந்த இந்த நிலை ராணி கர்ப்பவதியானவுடன் மாறிற்று. பெண் குழந்தை 'ஆல்யா' பிறந்தவுடன் இருவரிடையே இருந்த பிணைப்பு நெருங்கிற்று.

இருந்தாலும் கொஞ்சக் காலத்திற்குள் பழைய நிலை திரும்பிவிட்டது. ராணி அன்பின்றித் தனித்து நின்றார். கணவரை விட்டுப் பிரிந்திருப்பது நல்லதென்று சிலர் சொல்ல ராணி கெய்ரோவுக்குச் சென்றுவிட்டார். அதற்குப்பிறகு தம் மகளைப் பார்க்க ராணி பல தடவை முயன்றும் முடியவில்லை.

### விவாகரத்து

பின்னர் 1957 ஜூன் மாதத்தில் ஜோர்டானின் ஸ்தானிகர் ராணியிடம் ஒரு கவரைக் கொண்டுவந்து கொடுத்தார். அந்தக் கடிதத்தில் தம் திருமணத்தை மன்னர் ரத்துச் செய்துவிட்டதாகக் கண்டிருந்தது. மன்னர் தனிப்பட்டு ராணிக்கு எழுதிய கடிதத்தில் இதை ரகசியமாக வைத்திருக்கவேண்டுமென்று தெரிவித்திருந்தார்.

தாங்கள் விவாகரத்தைப் பற்றிப் பேசியதே இல்லையென்றும், இச்செயலுக்குத் தர்க்கரீதியாகவோ சம்பிரதாயப்படியோ எவ்வித ஆதாரமும் இல்லையென்றும் ராணி தீனு தம் கட்டுரையை முடித்திருக்கிறார்.

## உங்கள் தினப்பலன்

—சோதிட ஆசான் செ. தெல்லியூர்—

பிலவ ஆண்டு தைத்திங்கள் 11-ந் திகதி புதன்கிழமை (24-1-62) முழுமையும் சதுர்த்தி. இரவு 2-42 வரையும் பூரம். அமிர்தயோகம். கரிநாள். புதிதாக எந்தக் கருமத்தையும் ஆரம்பிக்கவேண்டாம். தெய்வவழிபாட்டில் காலத்தைக் கழிப்பது நலந்தரும். கல்விவிருத்திக்கான செயல்களை இரவில் கையாளலாம்.

### இன்று பிறந்தவர்களுக்கு

இத்தினத்தில் ஜனனமானவர்களுக்கு கல்வி மேன்மை, பணவரவு, சந்தோஷகரமான நற்கருமங்கள் நடத்தல், புதியன கொள்வனவு செய்தல், விவாகப்பேச்சுக்கள் நடத்தல், குழந்தைச்செல்வம் பெருகுதல், எதிரிகள் தொல்லைகள் நீங்கல், முயற்சிகளில் இலாபம் ஈட்டுதல் ஆதியன காணப்படுகின்றன. இடையிடையே செய்காரியங்களில் மந்த நிலைமை ஏற்பட்டு அதனால் பணக்கஷ்டங்கள், ஊழியர் தொல்லைகள், விளக்கக்குறைவுகள் காரணமாக சச்சரவுகள், தேகநலம் இடையிடை பாதிக்கப்படல், கடன்வரவு தாமதம் ஆதியன இருக்கும். பொருள்முடக்கம் செய்யும்போது தீர்க்கமாக யோசித்துச் செய்யவேண்டும். தெய்வவழிபாடு உதவியளிக்கும். பெண்களுக்கு இவ்வாண்டு பொதுவாக நன்மை தரும்,

### நட்சத்திர பலன்கள்

**அச்சுவினி:-** செல்வாக்கு மனநிம்மதி, எதிர்ப்புமறைதல்

**பரணி:-** காரியக்கேடு, பணியாளர் தொல்லை. பொருள் அழிவு.

**கார்த்திகை:-** தேகநல அபிவிருத்தி, தொழிலூக்கம், பணவரவு.

**ரோகிணி:-** நற்செய்தி, சந்தோஷம், பணவரவு.

**மிருகசீரிடம்:-** மன நிம்மதிக் குறைவு, யோசனையதிகம், தயக்கம்.

**திருவாதிரை:-** குடும்ப நிம்மதி, பணவரவு, சுகம்.

**புனர்பூசம்:-** சகோதரர் பகை, வாக்குக்கஷ்டம். நிம்மதி யழிவு.

**பூசம்:-** நல்லார்கொண்டாட்டம், பொருள்வரவு, மதிப்பு.

**ஆயிலியம்:-** செய்தொழிற் கஷ்டம், பணவரவு தாமதம், கவலை.

**மகம்:-** உடன் பிறந்தோர் ஊக்கம் கணித்தல், கல்விமதிப் புயர்தல், சுகம்.

**பூரம்.-** அற்பர் தொல்லை பணக்கஷ்டம், சஞ்சலம்.

**உத்தரம்:-** தொழிற் சித்தி உற்சாகம், செல்வாக்கு.

**அத்தம்:-** செய் தொழில் இலாபம், பணக்கஷ்டம் குறைதல், நிம்மதி.

**சித்திரை:-** வீண் வழக்கு பணத்தொல்லை, மனக்கவலை.

**சுவாதி:-** வாக்குச் சாதுரியம். கல்விமேன்மை, மதிப்பு.

**விசாகம்:-** தேகாரோக்கியம் குன்றுதல், காரியத்தாமதம், மனக்கவலை.

**அனுஷம்:-** உழைப்பு பலிதம், பணவரவு, தைரியம்.

**கேட்டை:-** பணியாளர் கஷ்டம், கடன்தொல்லை, கஷ்டம்.

**மூலம்:-** வர்த்தக நன்மை, பிரயாணசுகம், சந்தோஷம்.

**பூராடம்:-** பணக்கஷ்டம், செலவதிகம், சஞ்சலம்.

**உத்தராடம்:-** கொள்ளல், விற்றல் லாபம், யோசனைத் தெளிவு, சந்தோஷம்.

**திருவோணம்:** கலைகளில் விருப்பு, சந்தோஷ வாழ்வு, சுகம்.

**அவிட்டம்:-** பணியாளர் தொல்லை, பணவரவிற் கஷ்டம்.

**சதயம்:-** பெண்களால் உதவி, குடும்பசந்தோஷம், சுகநயம்.

**பூரட்டாதி:** கடும் உழைப்பு பலிதக்குறைவு, களையும் யோசனையும்.

**உத்தரட்டாதி:** தேகாரோக்கியம், சந்தோஷம், நிம்மதி.

**ரேவதி:-** செய்தொழில் அலைச்சல், எதிரிகள் இடர், கஷ்டம்.

---

## கார் அன்பளிப்பு தாமதம்

சாவகச்சேரி, செவ்வாய்

தைப்பொங்கல் தினத்தன்று சாவகச்சேரித் தொகுதி பாராளுமன்ற அங்கத்தவர் திரு. வி. என். நவரத்தினத்துக்குக் கார் அன்பளிப்புச் செய்வதாகத் தீர்மானித்திருந்தனர். ஒரு சில இடத்தல சேர்க்கவேண்டிய பணம் வந்து சேராமையால் அன்பளிப்புச் செய்வதும் பின்போடப்பட்டது.

---

இந்திய

# இசைக் கலைஞர்களுக்கு வரி விலக்கு அளிக்குக

## அபிவிருத்தி சங்க கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானம்

தெல்லிப்பளை, செவ்வாய்

இலங்கையில் மூன்று மாதங்களுக்குமேல் தங்கும் இந்தியருக்கு விதிக்கப்பட்டுள்ள 400 ரூபாய் வரியிலிருந்து, இந்தியாவிலிருந்து இலங்கைக்கு இசைச் சேவை புரிய வரும் இசைக் கலைஞர்களுக்கு வரி விலக்கு அளிக்குமாறு அரசினரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்றினை யாழ் இசையாளர் ஐக்கிய அபிவிருத்திச் சங்கம் நிறைவேற்றியுள்ளது.

இசையாளர் ஐக்கிய அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக் கூட்டம் திரு. என். கே. பத்மநாதன் தலைமையில் நிகழ்ந்தபோது முக்கிய முடிவுகள் செய்யப்பட்டன.

"பண்டைக் காலந் தொட்டு இலங்கையின் இசைக் கலை வளர்ச்சிக்குத் துணைபுரிய இந்தியாவிலிருந்து ஈழத்திற்கு வரும் கலைஞர்கள் தரமானவர்களாக இருக்க வேண்டுமென அறிவுறுத்தல்.

இலங்கையில் இசைக் கல்லூரி இல்லாத குறையைப் பல வருடங்களாக அரசினருக்கும் பொது மக்களுக்கும் எடுத்துக் காட்டிய எமது சங்கத்தின் நோக்கினை விரைவில் செயல்படுத்து முகமாக நாடெங்கிலும் இசைக் கல்லூரிகளை ஸ்தாபித்தல். இக்கல்லூரிகளில் நாகசுர, தவில், கலைகளுக்கு முக்கியமளிக்கப்படுவதுடன், தேவார திருவாசகங்களைப் பண்ணுடன் படிக்க முயற்சித்தல்.

இசையாளர் சங்க உறுப்பினர்களிடையே மரணச் சகாய நிதியை ஐக்கிய சங்க உதவியுடன் அமுல் நடத்தல்.

---

### கிரக சாந்தி

பளை, செவ்வாய்

இவ்வருடம் பெப்ரவரிமாதம் எட்டுக் கிரகங்களும் ஒன்று சேருவதமுன்னிட்டு இவை தீமை விளைவிக்காது, நன்மை விளைவிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் பன்றி கட்டான் கோணங்குளம் விநாயகர் ஆலயத்தில் இம்மாதம் முழுவதும் விசேஷ பூஜை நடைபெற்றுவருகின்றது.




# மங்கையர் உலகம்



## பெண்களும் சிகையலங்காரமும்

அலங்காரஞ் செய்துகொள்வது அழகுக்கா? அல்லது நாகரிகத்துக்கா? நாகரிகமென்றால் அழகில்லாமலும் இருக்கும் என்று இங்கு தொனிக்கிறதல்லவா? ஆம், நாகரிகமென்ற பேரில் அழகும் பின் தங்கிவிடுகிறது. காலத்துக்கும் நாகரீகத்துக்காக அலங்காரஞ் செய்துகொள்வதைவிட்டு அழகுக்கென்றே அலங்காரம் செய்துகொள்வதை பெண்கள் மனதில் வைத்துக்கொள்ளத் தவறிவிடுகிறார்கள். நாகரிகம் அதாவது 'பாஷன்' (Fashion) ஒரு மூலைக்குள் கிடக்கட்டும் என்று அதை விட்டுத்தள்ள வேண்டும் என்றில்லை. ஆனால் அதன்பேரால் பைத்தியக்கார வேஷமும் போட்டுவிடுவதா?

ஒருநாள் மாலை எனது தம்பியும் நானும் பட்டண வீதியொன்றில் நடந்துகொண்டிருந்தோம். எமக்கு முன்னதாக இரு பெண்கள் நடந்துகொண்டிருந்தார்கள். மிகவும் சமீபமாகையால் அவர்களை நன்கு கவனிக்க முடிந்தது. அவர்களைப் பட்டணப் பெண்கள் என்றும்சொல்லிவிடமுடியாது. பட்டிக்காட்டுப் பெண்களென்றும் சொல்லிவிட முடியாது. நன்கு அவதானிக்காது இருந்தால்கூட அவர்களது ஓர் அலங்காரம் தெருவீதியிலுள்ள எவரது கவனத்தையும் கவரத்தான்செய்தது. வேறொன்றுமில்லை அவர்கள் கட்டியிருந்த தலைமுடிகள்தாம் அவை.

முழுகுவதற்கு எண்ணெய் தடவிவிட்டு கூந்தலை உயரமாக கட்டிக்கொண்டு வீட்டில் சில நிமிடங்கள் மறைந்து நிற்பவர்களே பெண்கள். அந்த மாதிரி அவர்கள் உச்சியில் தான் கொண்டை கட்டியிருந்தார்கள். பார்க்கும் எவரது கண்ணையும் கவரக்கூடியதாக விருந்தது கொண்டைகளின் அழகல்ல; அவற்றின் அலங்கோலம்.

உயரமாகச் சிகையலங்காரஞ் செய்துகொள்ளும் நாகரீகம் ஒன்றுண்டு. அதில் அழகும் உண்டு. அந்த நாகரீகத்தின் பேரால்தான் பெண்கள் இருவரும் சிகையலங்காரம் செய்திருந்தார்கள். ஆனால், பிள்ளையார் பிடிக்கக் குரங்காக மாறியதுபோல் இவர்களது நாகரிகக் கொண்டை அநாகரீகக் கொண்டையாக மாறிவிடுகிறது. ஒருசில பெரிய புள்ளிகள் தெரிந்தோ தெரியாமலோ செய்யும் அலங்காரங்கள்தான் நாகரீகம் என்று நினைத்து சாதாரண பெண்களும் தாமும் அதுவாகப் பாவித்துக்கொள்ள முயல்கிறார்கள். தமது சாதாரண அழகையும் கெடுத்துவிடுகிறார்கள். அன்ன நடைபயிலப் போய்த் தன்னடையையுமல்லவா இழந்துவிடநேரிடுகிறது. இதைப் பெண்கள் உணரவேண்டும்.

நாகரிகச் சிகையலங்காரங்களைச் சரியாகச் செய்வதால்கூட அவையெல்லாம் ஒரு பெண்ணின் முகத்துக்கு ஒத்துக்கொள்வது அருமை. தத்தம் முகத்துக்கேற்றதாகச் சிகையலங்காரங்களைச் செய்துகொள்ளவேண்டும் அத்தோடு இடங்களுக்கேற்பவும் சிகை

### மங்கையர் உலகம்

'மங்கையர் உலகம்' இனி புதன்கிழமை தோறும் வெளிவரும்.

யலங்காரங்கள் அமையவேண்டும். கலியாண வீடுகள் விருந்து வைபவங்களுக்குச் செய்ய வேண்டிய சிகையலங்காரங்களையே கடைவீதிக்குச் செல்லும்போதும் செய்துகொண்டால் அதன் அழகு கெட்டுவிடாதா? இடத்துக்கேற்றதாகவும் சிகையலங்காரங்களைச் செய்துகொள்ள வேண்டும். காலத்துக்கும் நாகரிகத்துக்குமேற்றதாக அலங்காரங்களை மாற்றிக்கொள்வதில் தவறில்லை. ஆனால் அழகான சிகையலங்காரமுறைகளையும் கெடுக்கும் வகையில் அலங்காரஞ் செய்துகொள்ளக் கூடாது. நாகரிகக்கொண்டையை நன்கு கட்டிக்கொள்வதற்குத்தெரியாவிட்டால் தமக்குத் தெரிந்த கொண்டைகளையே கட்டிக்கொள்வது மேல்!

10,000,000 மக்களும் விரும்பி வாங்குவன!
இலங்கை முழுவதும் புகழ் பரப்புவன!
எவை?

டொலர்

ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD.
ONE DOLLAR
DOLLAR BRAND

பவுண் அடையாளம் உள்ள
அலுமினியப் பாத்திரங்களே!
ஏன்?

டொலர் அலுமினியம் மாற்று உயர்ந்தது சுத்தம் உள்ளது!

டொலர் அலுமினியம் அழகு அமைப்பு கண்கவர்ச்சி உள்ளது!!

டொலர் அலுமினியம் உறுதி உழைப்பு உத்தரவாதம் உள்ளது!!!

எல்லாவற்றிற்கும் மேல்

உங்கள் தாய்ப் பொன்னாட்டில் மாவிட்டபுரத்தில்
நவீன முறையில் செய்யப்படுவது!

டொலர் பவுணை பார்த்து வாங்குங்கள்
எங்கும் கிடைக்கும்

டொலர் மாத்திரமே
உத்தரவாதமானது!

தயாரிக்குமிடம்:

அலுமினிய இன்டஸ்ரீஸ் லிமிட்
மாவிட்டபுரம். யாழ்ப்பாணம்
J. D

## பனி காலத்தில் சரும அழகை பாதுகாப்பதுஎப்படி?

சருமத்துக்கும் பனிக்கும் ஏனோ ஒத்துக்கொள்வதில்லை. எத்தனை தடவைகள் தண்ணீரில் கழுவிக்கொண்டாலும் உலர்ந்த சிறு நேரத்தின் பின்னர் ஏதோ சொறிபிடித்த மாதிரி வெள்ளை நிறப் பொருக்காக முகம் கைகால்கள் எங்கும் காணப்படும். இதை என்னவென்றும் சொல்லமுடியாது. சிலருடைய சருமம் பனிகாலங்களில் பெரிய பிரச்சினையையே கொடுக்கும். அனேகமாக எல்லோருக்குமே இந்தப் பனிப் பொருக்குப் பிடிப்பதுண்டு. சோப்புப் போட்டுக் கழுவினதும் சொறிபிடித்த மாதிரி முகம் வெளுத்துக் காணப்படுகிறது. அதற்கு என்னதான் செய்யலாம் என்று சிலர் அவஸ்தைப்படுவதுண்டு. இந்தத் தற்காலிக வியாதியைத் தீர்த்துவிட முடியாமலில்லை.

பனிகாலங்களில் சருமத்தில் ஏற்படும் வெளுப்புக்குச் சோப்புப் போட்டுக் கழுவாதீர்கள் அப்படி வெளுப்பாக இருக்கும் இடத்தில் தயிரின் ஏட்டையோ அல்லது பாலின் கெட்டியான ஆடையையோ தேய்க்கவேண்டும். அரைமணிநேரம் ஊறிய பின்பு பயற்றம்மா, கடலைமா அல்லது சீயாக்காய்ப் பொடி ஏதாவது ஒன்றைப் போட்டுக் கழுவிக்கொள்ளலாம். அதன் பின்னர் நன்கு துடைத்துக்கொண்டு பவுடர் போடலாம். தினமும் இப்படிச் செய்துவந்தால் முகம் மிருதுவாகவும் மினுமினுப்பாகவும் இருக்கும். சீககிரத்தில் பவுடரும் கலைந்துவிடாது. மிஞ்சிப்போன பழைய தயிரும் உதவுகிறது. சருமமும் மிருதுவாகவும் மென்மையாகவும் வந்துவிடுகிறது.

அன்புள்ள மாலதிக்கு

## நாகரீகப் போர்வையில்...(4)

நகரப்புற வீதிக்கு வந்திருக்கும் படிப்பினைக்குரிய உருவத்தைப் பற்றிச் சென்ற கடிதத்தில் எழுதியிருந்தேன். அது உன்னைத் திகைப்பில் ஆழ்த்தியிருப்பதாகவும் அதன் மற்றைய அம்சங்களையும் தெரிவிக்குமாறும் கேட்டிருக்கிறாய்.

நமது சமூகத்தில் இரண்டு குறைபாடுகள் உண்டு. சிறிதும் நாகரிகமின்றி சில இடங்களில் பெண்கள் இருளில் மூழ்கிக் கிடப்பது. மற்றொன்று பழுத்த நாகரிக சூறாவளியில் சில பெண்கள் சிக்கி வாழ்வையே குலைத்துக்கொள்வது. இருசாராரும் ஒழுங்குபட்டுப் பெண்மையுடையவராய் உலகிற்குப் பயன்படல் வேண்டும் என்பதே இக்கடிதங்களின் தலையாய நோக்கமாகையால் நீ இதனை வரவேற்பாய் என்பது எனக்கு நன்கு தெரியும்.

விந்தைமிகு விஞ்ஞானத்தின் வியத்தகு சாதனைகள் உலகை எவ்வளவுக்கு கௌவிக்கொள்ள முடிந்தாலும் மனித இனத்தின் வாழ்வு இயற்கையோடு ஒத்திருக்காவிடில் அந்த வாழ்விலே அழகைக் காண முடியாது. இயற்கையோடு ஒத்த வாழ்வுதான் மனிதப் பண்புகளை வளர்க்கவும் அதன் மூலம் உலகை உன்னத நிலைக்கு உயர்த்தவும் முடியும் என்பது ஆன்றவிந்த சான்றோர் கருத்தாகும்.

'பழுத்த நாகரிகம்' என்ற போர்வையில் சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு வந்த அந்தப்பெண் உருவம் உண்மையிலேயே இயற்கைக்கு முற்றிலும் நேர்மாறான நாகரிகக் கோலம் பூண்டிருந்ததை இயற்கையே பார்த்துச் சிரித்திருக்கும்.

உடையை உடல் நலத்துக்கென அணிதல் வேண்டுமேயன்றி ஆடம்பரத்துக்கென்று அணிதல் கூடாது. ஆடம்பர உடை ஒருவரை உயர்த்துவதுமில்லை; அல்லாத உடை ஒருவரைத் தாழ்த்துவதுமில்லை. உயர்வு தாழ்வு உடையில் இல்லை. உடையில் இல்லாத அழகும் ஒழுக்கத்தில் இல்லாத மதிப்பும் எங்கிருந்து முளைக்கின்றதோ தெரியவில்லை! இதை அந்தப் பெண் அறிந்திருக்கவில்லைப் போலும்! பிறர் உள்ளத்தைக் கவரும் முறையில் உடைக் கோலஞ் செய்யும் பெண்கள் நிலை குறித்து நீ இரங்குவாய் என்பதை நான் அறிவேன்.

அப்பெண் தனது தலைமயிரை எவ்வளவுச்கு அலைத்தும் திரித்தும் அழகைக் கட்டியணைக்க நினைத்து அலங்கோலத்தைக் குடிகொள்ள வைத்திருக்கிறது. தலைமயிர் உடையன்று. அஃது இயற்கைப் பொருள். இயற்கைத் தலைமயிரை செயற்கை உடையெனக் கருதி பெண்ணினத்திற்கு அழகைக் கொடுக்கும் அந்த இயற்கை தந்த செல்வத்தை காப்பாற்றிக் கொள்ள நமக்குத் திறமையில்லை- அந்த அளவுக்கு அறிவு வளரவில்லை என்றால் நாம் நடமாடும்பிணங்களேயன்றி இயற்கை ஈந்த சிந்தனைச் செல்வங்களேயல்ல!

'அளியன்னதோரறறுன்னிய குழல்மடவீர்' என இலக்கியங்களில் வர்ணிக்கப்படும் பெண்கள் குலம் 'போனிடெயில்', 'கீரைப்பிடி', 'விரிசடை' 'குரோப்', 'மொட்டை' என தலையலங்காரம் செய்வதும் தலைமயிரைச் சிதைப்பதும் அழகல்ல! இயற்கைக்கு மாறான எதையும் பெண்கள் செய்வது அவர்களது இயல்புக்கு முற்றும் விரோதமானதாகும்.

நம்நாடு வெப்பம் மிகுந்ததுமன்று; குளிர் நிறைந்ததும் அன்று. தட்பவெட்ப நிலைமையில் சமநிலையுடையது. ஆகவே இயற்கையோடொத்து வாழ்வதே சிறப்புடையதாகும் என்பதை நீயும் ஒத்துக் கொள்ளுவாய் என்று நம்புகிறேன்.

செயற்கைக் கோலத்தினைப் பற்றி இக்கடிதத்தில் எழுத முடியாமலிருப்பதை மன்னிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

உனது அன்புள்ள
கிருஷ்ணவேணி

## ஒழுக்கமுள்ள கணவன்

"உடல் முழுவதும் திருநீறு பூசிய ஆண்டி, அழகில்லாத ஒரு பிரம்மச்சாரி" என்று சிவனைப்பற்றிப் பார்வதியிடம் நாரதர் வர்ணித்தார். "ஓ, அப்படியா! அவர் தான் என் கணவர்" என்றாள் பார்வதி. அதேபோல் பெண்களாகிய நீங்களும் பணம், புகழ், அழகு இவற்றைத் தேடி அலையாமல் நல்லொழுக்கத்துக்கு உறுதுணையான ஒருவனையே தேடவேண்டும். பார்வதியைப்போல் நீங்கள் தவமியற்றுவிட்டால் சிவனைப்போல அநேக ஆடவர்களைத் தோற்றுவிப்பது இயலாத காரியம்.

— மகாத்மா காந்தி

## மாங்கனி உணவு வகை: 2

செல்வி ஆறுமுகம் கூறும் ஆறுவகை மாங்கனி உணவுகளில் மாம்பழ ரசம் செய்யும் வகையைச் சென்றமுறை தந்தோம். இன்று அவர் கூறும் மாம்பழ ஜாம் செய்யும் முறையை இங்கு தருகிறோம்.

### மாம்பழ ஜாம்

தேவையான பொருள்கள்.—

1. மாம்பழம் 2 றாத்தல்
2. வெள்ளைச்சீனி ஒன்றரை றாத்தல்
3. எலுமிச்சம்பழம் 1
4. போத்தல், வனிலா, சோடியம் பென்செயிற் (Sodium Benzoate) ஆகியவை.

### செய்யும் முறை

மாம்பழங்களைக் கழுவித் தோலைச் சீவிச் சிறுசிறு துண்டுகளாக வெட்டி நிறுத்தல் வேண்டும். 2 றாத்தல் பழமாயின் ஒன்றரை றாத்தல் சீனியையும, எலுமிச்சம் புளியையும் விட்டு அடுப்பில் வைத்து நன்றாகக் காய்ச்சி பழரணியாக வந்ததும் வனிலா சிறிதளவு விட்டுத் துளாவி இறக்குதல் வேண்டும், பின்பு சுத்தஞ் செய்த போத்தலுக்குள் ஊற்றி சோடியம் பென்செயிற் இரு நெல்லளவு எடுத்து பாணிக்கு மேல் தூவி அதற்குமேல் வெண்மெழுகை உருக்கி ஊற்றி இறுக்கமாக மூடியால் மூடிவிட வேண்டும்.

---

முள்ளியவளை, செவ்வாய்

புதுக்குடியிருப்பைச் சேர்ந்த தேவிபுரம் குடியேற்றத் திட்ட விவசாயிகளுக்கு இலவசமாக வழங்குவதற்கென 35,000 வாழைக்கன்றுகளுக்குக் கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டிருந்தன. ஆயினும் அப்பகுதிக் குடியேற்றத்திட்ட அதிகாரி வாழைக்கன்றுகள் கொடுக்கவேண்டியதில்லை என அரசாங்கஅதிபருக்குச் சிபார்சு செய்ததாகவும் அதனால் விவசாயிகளுக்கு வழங்கப்படவில்லை எனவும் தெரியவருகிறது.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

புதன் 24-1-62

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 காலைக்கதிர், 7-30 திரை இசை, 8-00 வீணை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 கோட்டு வாத்தியம்.

இரவு 7-00 நேயர்விருப்பம், 7-30 கே. சபாரத்தினம் - பாட்டு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 உங்கள் பிரச்சினை, 9-45 தேர்ந்த இசை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7 - 15, பகல் 2, இரவு 7-15.)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-30 சுசீலா பத்மநாபன் - வீணை

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு, 1-00 பெண்ணுலகம், 1-30 கிளாரினட், 1-50 குரல் இசை, 2-10 உயர்தரப்பள்ளிகளுக்கு.

மாலை 4-45 விவிதபாரதி(கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 ராஜ்ய முன்னேற்றம் - பேச்சு, 7-45 சித்திரம், 8-00 சுசீலா பத்மநாபன் - வீணை, 8-30 திரைப்பட இசை, 9-15 நல்லுரை, 9-30 டெல்லி அஞ்சல், 9-50 இசைமாலை.

---

## ஆலய நிர்வாகசபை தெரிவு

தெல்லிப்பழை, செவ

ஊறணி அர்ச்அந்தோனியார் ஆலய நிர்வாக சபையினராகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். திருவாளர்கள் மோ. வேணுட், வி. றேமான்ட், ஓ. மனுவேற்பிள்ளை, தே. யோசேப், தே. மிச்கேற்பிள்ளை, பி. நேசமுத்து ஆ. சிங்கராசா, வ. ஆபேல், யோ. நிக்கிலாப்பிள்ளை.

---

## விளையாட்டுப் போட்டி

தெல்லிப்பழை, செவ்

ஊறணி புனித அந்தோனியார் சனசமூக நிலைய ஆண்டு விழா வண. கட்டளைக்குரவர் ஏ.ஆர். பிரவுணின் தலைமையில் மூவர்ணக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. பொஸ்கோ, சாவியோ இல்லங்களுக்கிடையே விளையாட்டுப்போட்டிகள் நிகழ்ந்தன. இப்போட்டிகளின்போது பொஸ்கோ இல்லம் 194 புள்ளிகள் பெற்றுச் சாம்பியனானது. சாவியோ இல்லம் 102 புள்ளிகளைப் பெற்றது. வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு கட்டளைக்குரவர் ஏ. ஆர். பிறவுண் பரிசுகளை வழங்கினார். சூழ்ச்சியின் வீழ்ச்சி என்ற நாடகம் சிறுவர்களால் நடித்துக் காண்பிக்கப்பட்டது.

---

## உற்சவத்தில் தோன்றிய பாம்பு

தெல்லிப்பழை, செவ்

மாங்கொல்லை ஞானவயிரவர் கோவில் வருடாந்த உற்சவத்தில் சுவாமி வீதிவலம் வரும்போது வட-கிழக்கு மூலையில் பாம்பு ஒன்று திடீரெனத் தோன்றியது. எவரையும் அது ஒன்றுஞ் செய்யவில்லை. சில நிமிஷங்களில் அது வந்தது போலவே மறைந்துவிட்டது. இதேபோல இரண்டாம் நாளும் அதே இடத்தில் பாம்பு தோன்றியது. பக்தர்கள் இவ்வாலயத்திலுள்ள நாகதம்பிரானுக்கு பால், பழம் வைத்து விசேஷ ஆராதனைகள் நிகழ்ந்தன. பின்னர் பாம்பு தோன்றவில்லை.

## ஔரங்கபாத்தில் இலங்கை பத்திரிகை ஆசிரியர் கோஷ்டி

பம்பாய், ஜன. 23

இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்யும் இலங்கை பத்திரிகையாளர் தூதுகோஷ்டி பம்பாயில் இரு தினங்கள் தங்கியபின் ஔரங்கபாத்துக்குப் புறப்பட்டது. அங்கிருந்து எல்லோராவுக்கு இத் தூது கோஷ்டி செல்லும். சென்ற வாரம் தூது கோஷ்டியினர் சென்னை, பங்களூர் ஆகிய இடங்களில் சுற்றுப்பிரயாணம் செய்தனர். இத்தூதுகோஷ்டியில் "ஈழநாடு" பத்திரிகையின் நிர்வாக ஆசிரியர் திரு. கே. பி. ஹரனும் இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

## பிள்ளையார் கோவில் உற்சவம்

சாவகச்சேரி, ஜன, 22

சாவகச்சேரியைச் சேர்ந்த பெருங்குளத்துப் பிள்ளையார் கோவிலில் தைப்பூசவிழா நேற்று நடைபெற்றது. அத்தருணம் அப்பகுதி மக்கள் காவடியெடுத்துக் கொண்டு பத்துமைல் தூரத்தில் உள்ள நல்லூர்க்கந்தசுவாமி கோவிலுக்குச் சென்று அபிஷேகம் செய்தனர். பெண்கள் பாற்செம்பு சுமந்து சென்றனர்.

---

## ரெக்கெற் கிளப் வெற்றி

சுன்னாகம், செவ்

சுன்னாகம் ரெக்கற் கிளப்புக்கும் குரும்பசிட்டிக் கிளப்புக்குமிடையில் நடந்த சாம்பியன் உதைபந்தாட்டப் போட்டியில் ரெக்கர் கிளப் 6—2 கோலகளால் குரும்பசிட்டிக் கிளப்பைத் தோற்கடித்தது.

---

## முத்தமிழ் விழா

தெல்லிப்பழை, திங்கள்

மாவிட்டபுரம் முத்தமிழ் கலைமன்றத்தின் ஆதரவில் முத்தமிழ்விழா இம்மாதம் 26, 27 திகதிகளில் நடைபெறவிருக்கிறது. முதல் நாள் விழாவிற்கு சிவஸ்ரீ க. துரைசாமிக்குருக்கள் தலைமை வகிப்பார். அன்றைய தினம் 25 ஆண்டுகளுக்கு மேலாக இசைத் தொண்டு புரிந்து வரும் நாகசுர வித்துவான்களான சோ. உருத்திராபதி, சு. க. இராசா ஆகியோருக்குக் கௌரவப் பதக்கங்கள் வழங்கப்படும். முத்தமிழ் விழாவிற்கென அமைக்கப்பட்ட காளிதாஸ் அரங்கினை சமாதான நீதிபதி திரு. வ. சரவணமுத்து திறந்து வைப்பார். பின்னர் நிகழும் இலக்கிய விழாவிற்கு திரு. கு. கதிரையாண்டி தலைமை வகிப்பார். புலவர் ம. பார்வதிநாதசிவம், வித்துவான் ப. சுப்பையா, த. சுண்முகசுந்தரம் ஆகியோர் பேச்சாளர்களாகக் கலந்துகொள்வர். இரண்டாம் நாள் விழா இசைநாடக விழாவாக நிகழும். இவ்விழாவிற்கு இசைப்புலவர் ந. சண்முகரத்தினம் தலைமை வகிப்பார். கலையரசு சொர்ணலிங்கம், கனக. செந்திநாதன், ஆ. த. பொன்னுத்துரை, பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் பேச்சாளர்களாகக் கலந்துகொள்வர். இரு தினங்களிலும் நாடகங்கள், திருமறை இன்னிசைக் கச்சேரிகள் ஆகியவை இடம் பெறும்.

---

## குற்றச்சாட்டுக்கு ஆதாரமில்லை

புதுடில்லி, ஜன. 23

பாகிஸ்தான் எல்லையில் பாரத துருப்புக்கள் திரட்டப்பட்டுவருவதாக அந்நாடு தெரிவிக்கும் குற்றச்சாட்டுக்கு ஆதாரமேகிடையாது என புதுடில்லியில் வெளிவிவகார அதிகாரி ஒருவர் மறுத்தார்.

# "மனத்தூய்மையே இன்பத்துக்கு வழி"

## திவ்ய ஜீவன சங்க கூட்டம்

திருக்கோணமலை, செவ்வாய்

"இன்ப துன்ப உணர்ச்சிகளுக்கு அடிப்படை மனமே. ஒருவனுக்கு நன்மை, தீமை ஏற்படுவதும் மனத்தாலேயே. அம்மனத்தினை நல்வழிப்படுத்தி தூய்மைப்படுத்தின் துயர் களைந்து இன்புறலாம். ஆகையினால்தான் பெரியோர் 'மனமே நீ நினையாய்' என்று பாடியுள்ளனர்" என திவ்விய ஜீவன் சங்க வெள்ளிவிழாவின்போது பேசிய ஸ்ரீமத் வடிவேல் சுவாமிகள் குறிப்பிட்டார். விழாவுக்கு யாழ்ப்பாண மாவட்ட உதவி நீதிபதி திரு. செ. தனபாலசிங்கம் தலைமைதாங்கினார்.

ஆத்ம ஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா பேசுகையில் கூறியதாவது:

"மனிதன் அறிவின் உச்சத்தை எட்டிப் பிடிப்பினும் அவன் குணம் மாறாவிடின் பயனில்லை. அரக்கனைப் போன்ற கூரிய அறிவினை ஒருவன் பெற்றாலும் மனிதத்தன்மையில்லாவிடின் அவன் மரம் போன்றவனே.

## யு. எஸ். ராக்கெட் சனிவரைஒத்திவைப்பு

கேப்கனவரல், ஜன. 23

அமெரிக்கா சந்திரனுக்கு அனுப்பவிருந்த ராக்கெட் சனிக்கிழமைவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

---

## பாடசாலை உரை அரங்கு

கொழும்பு, செவ்வாய்

பாடசாலைகளின் உரையரங்கொன்றை கல்வி மந்திரி திரு பதியுதீன் முகம்மது இன்று கொழும்பு தேர்ஸ்டன் கல்லூரி மண்டபத்தில் ஆரம்பித்துவைத்தார். கல்வி மந்தியுடன் அவரது பாராளுமன்றக் காரியதரிசி, நிரந்தரக் காரியதரிசி, துணைக் காரியதரிசிகள் ஆகியோர் இம்மாநாட்டில் கலந்துகொண்டனர். ஜனவரி 27ம் தேதி வரைக்கும் இம்மகாநாடு நடைபெறும்.

## சாட்சிக்கு கடூழியசிறை; எதிரி விடுதலை

கண்டி, செவ்வாய்

"யூனியன்களை நீங்கள் வைத்திருககலாம். உங்களுக்குள் சண்டை சச்சரவுகளும் இருக்கலாம். ஆனல் சட்டத்துக்கு முன்னல் நீங்கள் உண்மையைத்தான்" பேசவேண்டும்.

1960-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் முதல் திகதி புசல்லாவையிலுள்ள டொறகொல தோட்டத்தைச் சேர்ந்த ஐயாவுவின் மகன் ராமையாவையும் கதிரவேலுவின் மகன் ஐயாவுவையும் துப்பாக்கிஒன்றினல் சுட்டுக் கொலைசெய்ய எத்தனித்ததாக வேலுவின் மகன் கறுப்பையா என்பவர் மீது குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு நீதியரசர் திரு. டி. எஸ். பெர்னண்டோ முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. விசாரணை முடிவில் ஐயாவுவையும், ராமையாவையும் நோக்கி நீதியரசர் மேற்கண்டவாறு கூறினர்.

விசாரணை முடிவில் ஜூரிமார்களின் ஏகமனதான தீர்ப்புக்கிணங்க நீதியரசர் எதிரியை விடுதலைசெய்து சாட்சியொருவருக்கு மூன்று வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்தார்.




யாரிக்க சில விநாடிகளே ஆகின்றன


பருக ஆரம்பித்ததும்


ஒரே ஆனந்தம்


சிறுவர் முதல்


முதியோர் வரை

(குடும்பத்தில் தினசரி உபயோகிக்கக் கூடிய அளவுக்கு ஸல் விலை குறைவானது என்பது உங்களுக்குத் திருப்தியளிக்கும்— பாலுக்கும் சீனிக்கும் செலவாகும் பணம் மிச்சமாகும்)

நீங்கள் விரும்பும் பானம்!




ஸல் என்றால் குடும்பத்தார் அனைவருக்கும் ஒரே மகிழ்ச்சி. ஸல் சுவை மிகுந்த சிறந்த பானமானாலும் குறைந்த விலையுள்ள இதர மோல்டட் பால்களைவிட இதன் விலை அதிகமில்லை. குழந்தைகள் இதை வெறும் பாலைப் போலவே பருக விரும்புகிறார்கள்—வெந்நீரிலோ, குளிர்ந்த நீரிலோ கலந்து தயாரிக்கலாம். இதை நீங்கள் டீயுடனே, கோப்பியுடனே பாலுக்குப் பதில் கலந்து பருக விரும்பலாம்—அதன் பாலாடையின் சுவை மிகுந்த தித்திப்பு உங்கள் பானத்தின் சுவையைப் பன்மடங்காக்கும். சீனி தனியாகச் சேர்க்கவேண்டிய அவசியமில்லை என்றே சொல்லலாம்.

ஸல்
உடன் கரையும்
மோல்டட் பால்
குடும்பத்தார் உடன் விரும்புவது

— ஹார்லிக்ஸ் தயாரிப்பாளர்களால் தயாரிக்கப்பட்டது

# தெஹ்ரானில் அரசியல் தலைவர்கள் பலர் கைது

## ஆர்ப்பாட்டத்தில் 1 மாணவர் பலி

தெஹ்ரான், ஜன. 23 பாரசீகத்தின் முன்னாள் பிரதமர் மொஸாதிக்கை ஆதரித்தும் தற்போதைய அலிஅமீரின் அரசாங்கத்தை ராஜினமாச் செய்யக்கோரியும் மாணவர்கள் இன்று மூன்ருவது தினமாக ஆர்ப்பாட்டம் செய்தனர். ஆர்ப்பாட்டம்செய்த மாணவர்கோஷ்டியொன்றுக்கும் பொலிசாருக்குமிடையில் இன்று ஏற்படட கைகலப்பில் பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் ஒரு மாணவர் உயிரிழந்தார். மற்றும் பலர் காயமடைந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டங்கள் சம்பந்தமாக இதுவரை பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

முன்னுள் பிரதமர் மொஸாதிக்கின் மந்திரிசபையில் அங்கம் வகித்த அரசியல் தலைவர்கள் பலரும் கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நாட்டில் இப்பொழுது எழுந்துள்ள நிலைமைபற்றி மந்திரி சபை இன்று அவசரமாகக் கூடிஆலோசனை நடத்தியது.

---

## வீடமைப்பு இலாகா

### கடன் வழங்க பணமில்லை

கொழும்பு, செவ்வாய் தேசிய வீடமைப்பு இலாகாவுக்கு அரசாங்கம் உபமான்யப் பணம் வழங்காவிட்டால், வீடமைப்புக்கு புதிய கடன் கோருபவர்களின் விண்ணப்பங்களை அடுத்த ஆறு வருடங்களுக்கு இலாகா ஏற்றுக்கொள்ள முடியாதிருக்குமென்று வீடமைப்புக் கமிஷனர் ஜயனெட்டி தெரிவித்தார். வீடமைப்பு இலாகாவிடம் இப்பொழுது நிதியில்லையெனினும் ஏற்கெனவே அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு இலாகா கடன் வழங்குமென்று அவர் தெரிவித்தார்.

## தியேட்டர் செய்திகள்

யாழ்ப்பாணம் வெலிங்டன் சிவாஜிகணேசன் - ஜெமினி கணேசன் நடித்த பாசமலர்

●

யாழ்ப்பாணம் மனோகரா மனோகர் - ராஜசுலோசன நடித்த படித்த பெண்

●

சாவகச்சேரி தேவேந்திரா: சிவாஜி கணேசன், பி. சரோஜா தேவி நடித்த விடிவெள்ளி

இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு) விஜயா (மட்டக்களப்பு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) வெப்பிளி (கண்டி)

ஸ்ரீகிருஷ்ணு (திருக்கோணமலை) லக்ஷ்மி (இரத்தினபுரி) மொடர்ன் (பதுளை)

விஜிதா (மஸ்கெலியா) தீவொளி (நுவரெலியா) ஜெமினி (ராகல)

★ உண்மை இலட்சியம்!

★ அன்புத் தியாகம்!!

★ உணர்ச்சி ஏக்கம்!!!

மூன்று உணர்ச்சிப் பின்னல்களில் உருவான இலக்கியப் படைப்பு!



சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், சாவித்திரி, எம. என். ராஜம், தங்கவேலு, எம். சரோஜா, எம். என். நம்பியார்

நடித்த

பாச மலர்

திரைக் கதை - டைரக்ஷன்: ஏ. பீம்சிங்

மனோகரா (யாழ்ப்பாணம்)

மனோகர் ராஜசுலோசன

நடித்த

படித்த பெண்

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி. 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு ஜனவரி மாதம் 24-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## நகரசபைத் தலைவர் ராஜினமா

பண்டாரவளை, செவ்வாய் பண்டாரவளை நகர சபைத் தலைவர் திரு. எஸ். எம். நடராசா, தமது பதவியிலிருந்து ராஜினமா செய்துள்ளார் திரு. நடராசா நகர சபையின் ஒரு அங்கத்தவராகத் தொடர்ந்து பணியாற்றுவார்.

---

## தேயிலை ஏலவிற்பனை நிறுத்தப்படலாம்

கொழும்பு, செவவாய் கொழும்பிலுள்ள ஏற்றுமதி கம்பெனிகளின் கிட்டங்கிகள் யாவும் நிரம்பியுள்ளதால் தேயிலை, ரப்பர் ஏலவிற்பனை நிறுத்திவைக்கப்படக்கூடுமென தெரிகிறது.

---

## அம்மைநோய் அபாயமில்லை

கொழும்பு, செவ்வாய் 'கொழும்பு நகரில் இப்பொழுது பெரியம்மை நோய்பரவும் அபாயம் எதுவும் இல்லை. பெரியம்மை நோய்பற்றிக் கவலைப்படிவதற்கு எதுவுமில்லை.' என்று கொழும்பு நகரசபைச் சுகாதார அதிகாரிகள்தெரிவித்துள்ளனர்.

---

## தற்காலிக சுகாதார மந்திரி

கொழும்பு, செவ்வாய் ஆயுர்வேத ஆராய்ச்சி நிலையம் அமைப்பது சம்பந்தமாக இந்திய அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்துவதற்காக சுகாதார மந்திரி திரு. ஏ. பி. ஜயசூரியா நேற்று புதுடில்லிக்குப் பிரயாணமானுர். திரு. ஜே. பி. ஒபயசேகரா தற்காலிக சுகாதார மந்திரியாக பிரமாணமெடுத்துக்கொண்டார்.

---

## புதிய மாவட்ட நீதிபதி

யாழ்ப்பாணம், புதன் கேகாலை நீதிபதியாகக் கடமையாற்றிய திரு. வி. எம். குமாரசுவாமி இவ்வருடம் மார்ச் மாதம் 6-ம் திகதிவரை யாழ்ப்பாண மாவட்ட நீதிபதியாகக் கடமையாற்றுவார்.

இங்கு நீதிபதியாகக் கடமை ஆற்றி வந்த திரு. என். கிருஷ்ணதாசன் அசைஸ் கமிஷனராக நியமனம் பெற்று நீர்கொழும்புக்குச் செல்வதாலேயே இவ்வித மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

---

## 18,000 பொலிஸ் கான்ஸ்டபிள்கள் கடமையாற்றுவர்

சென்னை, ஜன. 23 தமிழ்நாட்டில் அடுத்தமாதம் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் 18,000 பொலிஸ் கான்ஸ்டபிள்கள் கடமையாற்றுவார்களெனத் தெரிகிறது.

---

## பஸ் சேவை நேர சூசிகை மாறும்

கொழும்பு, செவ்வாய் இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ்கள் அவைசெல்லக்கூடிய வேகத்தைவிட அதிக வேகமாகச் செல்வதைக் கட்டுப்படுத்துமுகமாக இ.போ.சபை விரைவில் தனது நேரசூசியை மாற்றியமைக்கவிருக்கிறது.

---

## தவணை முறையில்...

(5ம் கலத் தொடர்ச்சி)

யின் யோசனைக்கிணங்க சட்டத்தில் திருத்தம் செய்தால் இந்த யோசனையை அமுலுக்குக் கொண்டுவர முடியும் என்றும் அட்டோர்னி ஜெனரல் தெரிவித்துள்ளார்.

# திருமணத்துக்குச் சென்று வந்த கம்பெனி டைரக்டர்

## காருக்குள் மரணமானர்!

யாழ்ப்பாணம், செவ்வாய் கொழும்பு சோமவில்லி அண்ட் கம்பெனியின் டைரக்டர் திரு. டி. சபாநாயகம் (வயது 61) நேற்று மரணம் சம்பந்தமாக திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் ஜே. பி. யு. எம். மரணவிசாரணை நடத்தினர். சம்பவம் பற்றிக் குறிப்பிட்டதாவது:

"இந்தியாவில் நடைபெற்ற திருமணமொன்றுக்கு சமுகமளித்துவிட்டு திரு. சபாநாயகம் டாக்டர் நெற்சிங்கத்துடன் நேற்று பிற்பகல் 4-20க்கு பலாலி விமான நிலையத்தை வந்தடைந்தார். பின்னர் இவர்கள் இருவரும் ஆனைக்கோட்டையிலுள்ள உறவினரைச் சந்தித்துவிட்டு மாணிப்பாயிலுள்ள திரு. மகாதேவாவைச் சந்திக்கச் சென்றனர். இவர்களின் திட்டப்படி மூவரும் கொழும்புக்கு கார் ஒன்றில் செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. காருக்குள்ளேயே திரு. சபாநாயகம் மூர்ச்சித்து விழுந்தார்.

திரு. சபாநாயகத்தை டாக்டர்கள் நெற்சிங்கமும் தாமோதரமும் பரிசோதித்தனர் அரைமணி நேரத்திற்குள் அவர் மரணமானர்.

இயற்கை காரணங்களால் திரு. சபாநாயகம் மரணமானர் என மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார். ஈமக்கிரியைக்காக அவரின் உடல் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

---

# தப்பியோடிய கைதி பிடிபட்டார்!

## 29-ம் திகதி வரை ரிமாண்ட்

யாழ்ப்பாணம், புதன் யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலிருந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை தப்பியோடித் தலைமறைவாக இருந்து வந்த சிறைக் கைதி நேற்றுப் பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணத்திலிருந்து ஆறு மைல்களுக்கப்பாலுள்ள சண்டிலிப்பாய் என்னும் இடத்தில் ஓர் வீட்டு வராந்தையில் நித்திரையாய்க் கிடந்த அந்த கண்டியைச் சேர்ந்த எஸ். ஜி. சாள்ஸ்சை சங்கானைப் பொலிசார் கைது செய்தனர்.

மல்லாகம் மாஜிஸ்டிரேட் திரு. வெஸ்லி டி. தாமோதரம் முன்னிலையில் அக்கைதி ஆஜர் செய்யப்பட்டார். இம்மாதம் 29-ந் திகதி வரை ரிமாண்டில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

---

# 6 பிள்ளைகளின் தாயார் தூக்கிட்டு தற்கொலை

## யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த பரிதாப சம்பவம்

யாழ்ப்பாணம், புதன் யாழ்ப்பாணம் பலாலி வீதியைச் சேர்ந்த கனகரத்தினம் பெண் பரமேஸ்வரி (வயது 33) என்றஆறுபிள்ளைகளின் தாயார் நேற்றுப்பகல் கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

இதுசம்பந்தமாக திடீர்மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்னம் மரணவிசாரணை நடத்தினர்.

இறந்தவரின் மகளான செல்வி கனகரத்தினம்கமலேஸ்வரி (வயது 14) சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

எனது தாயாருக்கு ஆறுபிள்ளைகளுண்டு. நான் இரண்டாவது பிள்ளை. எனக்கு மூத்த அண்ணனுக்கு இப்பொழுது வயது 16. கடைசிச் சகோதரரின் வயது ஆறுமாதம் கடந்த இரண்டு மாதகாலமாக எனது தாயார் மூளைக்கோளாறினல் பீடிக்கப்பட்டிருந்தார். நித்திரையில்லாதிருந்த அவர் தான் தற்கொலை செய்துகொள்ளப் போவதாக அடிக்கடி கூறிவந்தார். ஒருமாதத்திற்குமுன் கிணற்றில் விழுந்து இறக்க முயற்சித்தபோது காப்பாற்றப்பட்டார். எனது தகப்பனர் யாழ்ப்பாணம் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தில்வேலை செய்கிருர். சம்பவம் நடைபெற்ற அன்று வீட்டில் நானும் எனது இளைய சகோதரனுந்தான் இருந்தோம். இறந்தவர் வீட்டுத் திண்ணையில் இருந்தார். நான் குசுனிக்குள் சென்ற சிறிது நேரத்தில், பிள்ளைத் தொட்டில் கயிற்றைப்பிடித்துக் கொண்டு தாயார் தூங்குகிருர் என அவன் சத்தமிட்டான். நான் விரைந்துசென்றேன். இறந்தவர் குற்றுயிரோடு தூங்கிக்கொண்டிருந்தார். கூச்சலிட்டேன். அயலவர்களும் வந்து அவரை டாக்டரிடம் எடுத்துச் சென்றோம். ஆனல் வழியில் அவர் இறந்துவிட்டார்.

இறந்தவரின்கணவரான திரு. கனகரத்தினம், டாக்டர் பால சுப்பிரமணியம் ஆகியோரும் சாட்சியமளித்தனர்.

மனம்குழம்பிய நிலையில் தற்கொலை செய்துகொண்டாரென மரணவிசாரணை அதிகாரி தெரிவித்தார்.

---

# தவணை முறையில் சிறை அனுபவிக்கும் திட்டம்

## சட்டவிரோதமான தென அட்டோர்னி ஜெனரல் தீர்ப்பு

கொழும்பு, செவ்வாய் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் தங்கள் தண்டனையை வார இறுதிகளில் தவணை முறையில் அனுபவிப்பதற்கு அனுமதியளிப்பது சட்டவிரோதமானது என்று அட்டோர்னி ஜெனரல் தெரிவித்துள்ளார்.

சிறைத் தண்டனை விதிக்கப்பெற்ற கைதிகள் தங்கள் தண்டனைக் காலத்தை வார தவணை முறையில் வார இறுதிகளில் அனுபவித்துக் கழிக்க வேண்டுமென்று உள் நாட்டு, கைத்தொழில், கலாசார மந்திரி தெரிவித்திருந்த ஒரு யோசனை சம்பந்தமாகவே அட்டோர்னி ஜெனரல் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இப்பொழுதுள்ள சட்டத்தின்படி சிறைத் தண்டனை பெற்ற ஒரு கைதி தமது தண்டனையைத் தொடர்ச்சியாக அனுபவிக்க வேண்டும் என்று அட்டோர்னி ஜெனரல் கூறியுள்ளார்.

ஆனல் சிறைத் தண்டனையைத் தவணை முறையில் கைதிகள் அனுபவிப்பதற்கு அனுமதியளிக்க வேண்டுமென்ற மந்திரி

(5ம் கலம் பார்க்க)